# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 11-ம் இலக்கம்


## வியாகுலமாதாவும் மௌனதிருச்சபையும்

மௌனதிருச்சபையைத் தமது மடிமேல் வளர்த்திக்கொண்டு அதைப்பார்த்து மாதா கண்ணீர் சிந்தும்காட்சி எமது மனக்கண் முன் நிலவுகின்றது.

இம்மாதம் 5-ம்திகதிவெளிவந்த 'காவல்'னிலே மௌனதிருச்சபை வாரம் என்ற தலையங்கத்தின்கீழ் வரையப்பட்டிருந்த ஆசிரியவசனத்தைக் காவலநேயர்கள் படித்துச் சிந்தித்திருப்பார்கள். வியாகுலமாதாவின் பிள்ளைகளுடைய இதயங்களை அதுதட்டியருட்டி இருக்குமென்பதில் ஐயமில்லை. அதிலே "இம்மாதம் 15-ம்திகதியாகிய திருப்பாடுகளின் ஞாயிறு முதல் 22-ம்திகதி குருத்தோலை ஞாயிறு வரையிலுள்ள ஒருவாரமும் மௌனதிருச்சபைவாரமாக அனுசரிக்கப்படும்" என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தவாரத்தில்தான் "ஆரும் வெள்ளி" என நாம்அழைத்துக் கொள்ளும் மகாபக்தியருட்சிக்குரியதினம் வருகின்றது. இத்தினத்தில்தான் மாதாவின் வியாகுலங்களைப் பொதுவாகவும், சிலுவையின் பாதையிலும், கல்வாரிமலையிலும் மாதாஅனுபவித்தசமுத்திரம்போலும்பொங்கியெழுந்த சொல்லிலடங்காத— மட்டுக்கெட்டாத மாபெரும் வியாகுலங்களை விசேடவிதமாகவும்நாம்மனத்தில் இருத்திஉருக்கமாகச்சிந்திக்கின்றோம்.

நாம் மேலேகுறித்தவாறு திருச்சபைச் சரித்திரத்திலே முன்னர் எக்காலத்திலுமில்லாத அகோர குரூர வேதகலாபனையினால் இக்காலத்திலே எமது மாதாவாகிய திருச்சபையின் ஞானச்சரீரம் கொடிதாக வதைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, மாதாவின்மடிமேல் குற்றுயிராக வளர்த்தப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான சத்தியதிருச்சபையின் மக்கள் சத்தியதிருமறையைமறுதலிக்கச் சம்மதியாததினால் முன்னில்லாத பயங்கரவிதமாக வாதிக்கப்பட்டுத் தங்கள் குருதியைச்சிந்தி வேதசாட்சிகளாக மரணமடைந்துள்ளார்கள். கொல்லப்பட்ட மேற்றிராணிமார், குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரின் தொகையோ அனந்தம். கத்தோலிக்க மக்களின்தொகையோபல லட்சம். இதன்கீழ் நாம் குறிக்கும் பெரும்தேசப்பரப்புகளில் மேற்றிராணிமாரோ, குருமாரோ, கத்தோலிக்க ஆலயங்களோ, பாடசாலைகளோ இருந்தவிடமும்தெரியாது அழிக்கப்பட்டனர்— அழிக்கப்பட்டன. கோடிக்கணக்கான மக்கள் தங்கள்சொந்தநாடுகளை— வீடுவாசல்களைக் கைவிட்டு வலசைவாங்கியுள்ளார்கள். இவர்களிலும் கூடியதொகையானமக்கள் கம்யூனிஸ்தர்களால் அடிமைகளாக்கப்பட்டு, வேலைமுகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் சொல்லொணா வாதைவேதனைகளை அனுபவிக்கின்றார்கள். மேலே கூறியவைகள்பற்றிய விபரங்களை நுட்பமாக விபரிப்பின் பலபிரபந்தங்களாகும்.

இம்மேரையாக ஆவேசங்கொண்ட நரகசாத்தானால்தூண்டிநடத்தப்படுகின்ற வேதகலாபனையினால்வாடிவதங்கி, நொறுங்குண்டுதியங்கும் நாடுகள்பலவற்றின் நாமங்களைமாத்திரம் இதன்கீழ் தருகின்றோம்:

(1) அல்பேனியா. (2) குரேஏஷியா. (3) சிலோவேனியா. (4) பல்கேரியா. (5) ஹங்கேரி. (6) பொகேமியா, மொறேவியா. (7) ருமேனியா. (8) கிழக்கு ஜேர்மனி. (9) போலாந்து. (10) லிதுவானியா, லெற்றோனியா, எஸ்தோனியா. (11) ஊக்கிறேன். (12) ருஷியா. (13) சீனதேசம் (14) இந்தோசீனா, வடகோறியா. (பதினான்கு திருச்சிலுவைப்பாதை ஸ்தலங்கள்) இவைதவிர இந்தியாவிலுள்ள கேரளநாட்டிலும், ஒருகால் பொன்னாடும், நன்னாடுமாயிருந்த எம்தாய்நாடாகிய லங்காதுவீபத்திலுமே நம்சத்தியமறையையும், தேவகோட்பாட்டையும் "கரடியும்," "டிறைகன்" என்ற குரூரமான நிரையத்துப் பறவைநாகமும் தலைகாட்டி, அவைகளை அறவே நாசமாக்கிவிடக் கங்கணம்கட்டிநிற்கின்றன.

இவைபற்றிச் சிந்திக்கும்போது பலவிதமானகேள்விகள் எமது உள்ளத்திலே எழுகின்றன. இவ்விதமாக இருள்தேங்கும் கொடுமையின்காலம் எம்மீது ஏன்வந்திறங்கவேண்டும்? பரமபிதா எம்மைக் கைநெகிழ்ந்துவிட்டாரா? மாதா எம்மைமறந்துவிட்டாவா? நீதியின்சோதி அஸ்தமித்துவிட்டதா?........

சகோதரமே! பரமபிதா எம்மைக்கைவிடவுமில்லை. மாதா எம்மைமறக்கவுமில்லை. சுருங்கக்கூறில் இவைகள்யாவும் எமது பாவங்களின் பலாபலன்களே. பாவிகளுக்காகப் புண்ணியவான்களும் இரத்தம்சிந்துகின்றார்கள். நாமே பிதாவையும், மாதாவையும் மறந்ததுரோகிகள். ஆகவே, சிட்சிக்கப்படுகின்றோம்.

சிலுவையில்மரணித்த தேவசுதனின்திருமேனியை மாதா மடிமேல்வளர்த்திக் கங்குகரையில்லாப் பிரலாபக்கண்ணீர் சிந்திவருந்துவதைநோக்கு: திருமகனோ மட்டிலடங்காத பரிசுத்தர். மாதாவோ அற்பமாகும் அனுகாத அமலஉற்பவி. அப்போது ஏன் அவர்கட்கு இந்தத்தீர்வை? இந்தத்தீர்வைக்கு மூலகாரணம் யார்? நாம்தான்.

ஆகவே, மாதாவைஅண்டி அவவுடையமன்னிப்பை வேண்டவும், அவவுடைய வியாகுலம்நிறைந்த இருதயத்துக்கு நிந்தைப்பரிகாரம் செய்யவும், அவவுடையகண்ணீரைத் துடைக்கவும் புறப்பட்டு எழுந்து செல்லுவோமாக! எங்கள்மார்பில் பிழைதட்டி, ஆழ்ந்த மனஸ்தாபத்துடன் அவவுக்குச் சொல்லுவோமாக:

அம்மா! வியாகுலத்தாயே! உமதுதிருக்குமாரனை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்ததும், கன்னத்தறைந்ததும், மறுதலித்ததும், முண்முடிசூட்டி வாதித்ததும் பாவியாகியநான்தான். யூதர் குழாம்முன்னிலையில்நின்று "யேசுநசரேனைச் சிலுவையில் அறைந்து கொல்லும்" என்று ஓலமிட்டவன் நான்தான். பிலாத்தன் இட்ட அநியாயத்தீர்வைக்கு முதற்சாட்சியிட்டவனும், நேசயேசுவைச் சிலுவையில்அறைந்த கொலைஞனும் நான்தான்.

ஐயோதாயே! திரிபுவனங்களுக்கும் தேவஇராசாவாய்உள்ளவரின் திருச்சிரசில் முண்முடியை அழுத்திவிட்டேனே! செகசோதியாக ஒளிவீசும் அவரதுதிருமுகச்சாயலை உருவழித்துவிட்டேனே! கருணையேநிறைந்த அவரின் திருவிழிகளை மூடிவிட்டேனே! அன்பையே அமிர்தமாகச்சொரிந்த அவரின்திருஉதடுகளைப் பூட்டிவிட்டேனே! பாவிகளைத் தேடிநடந்த திருப்பாதங்களையும், அவர்களை அரவணைத்த திருக்கரங்களையும் கூரியஆணிகளால் அறைந்துவிட்டேனே! யூதாவின்சிங்கமாகிய அவர்திருமேனியைக் கிழித்து, சர்வலோகங்களையும் தாங்குபவரின் திருத்தோளில் சிலுவையைச் சுமத்திவிட்டேனே! சகலமாந்தரையும்அளவில்லாக்கருணையுடன் நேசித்த அவருடையதிருஇருதயத்தை ஈட்டியினால் குத்திப்பீறிவிட்டேனே! அம்மா! எங்களை மன்னித்தருளும். எங்கள் அக்கிரமங்களின்பயனாக வதைக்கப்பட்டு ஏங்கிப்பரதபிக்கும் மௌனதிருச்சபையிலுள்ள எங்கள்சகோதரர்கள்மேல் இரங்கும்! இரங்கும் எம்அன்னையே!

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## மௌனதிருச்சபை வாரம்

இந்தத்திருப்பாடுகளின் வாரத்தை விசுவாசிகள் மௌனதிருச்சபைக்காக அர்ப்பணஞ்செய்ய வேண்டுமென்று நம்மேற்றிராணியாண்டவர் ஆசிக்கின்றார். மௌனதிருச்சபையென்று அழைக்கப்படுவதாகிய இருள்சூழ்ந்த அப்பகுதியிலுள்ள எமது ஞானச்சகோதரர்களுக்காக விசேஷசெபங்களும், பரித்தியாகங்களும் செய்ய வேண்டுமென ஆண்டவர்அவர்கள் கேட்டுக்கொள்ளுகின்றார்.

ஆகவே, மேற்றிராணியாண்டவர் பின்வருமாறு உத்தரவிட்டிருக்கின்றார்.

1. நமது கோவில்களிலெல்லாம் 20-ந்திகதி வெள்ளிக்கிழமையும், 21-ந்திகதி சனிக்கிழமையும், 22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையும் பிரசித்தசிலுவைப்பாதைப் பக்திமுயற்சி நடைபெறவேண்டும்.

2. திருச்சிலுவைப்பாதையின்பின் திவ்வியநற்கருணை முன்பாக ஆராதனையும், செபமும்அடங்கிய திருமணித்தியாலம் நடைபெறவேண்டும். திருமணித்தியாலத்தின்போது, மௌனதிருச்சபையிலே அத்தகைய மனுத்தன்மையற்ற செயல்களுக்குப் பொறுப்பாயுள்ளவர்களின் மனதைச் சர்வேசுரன் திருப்பியருளுமாறு பக்திவேகமானசெபமும், மற்றும்பரித்தியாகங்களும் செய்யப்படவேண்டியதன் அவசியத்தைவிளக்கிச் சிலவார்த்தைகள் சொல்லப்படும்.

3. "தாந்தும்ஏர்கோ" பாடப்படுமுன் மௌனதிருச்சபைக்காகப் பரிசுத்தபிதாவால் இயற்றப்பட்டசெபம் சொல்லப்படும்.

# அங்கும் இங்கும்

### ஒரு தொழிற்சங்க துரோகி

"திரு. பிலிப்குணவர்த்தன அரசாங்கத்துக்கு வால்பிடிக்கும் ஒரு தொழிற்சங்க துரோகியாவார். இவருடைய காலம் மிகச் சொற்பமானது. இவருடைய விப்லவகார சமசமாஜகட்சியும், கம்யூனிஸ்தகட்சியும் அரசாங்கத்துக்குவால்பிடிக்கும் கட்சிகளாகும்."

**டக்டர் கொல்வின் ஆர். டி சில்வா,**
வெள்ளவத்தை - கல்கிசை எம். பி.

### கண்டிப்பான ஒழுக்கமுறை

"இன்று புத்தபாடசாலைகளில் — விசேஷமாய் இந்நகரில் புத்தபிள்ளைகளுக்கு இடமில்லை. கத்தோலிக்க பாடசாலைகளிலே எப்போதும் கண்டிப்பான ஒழுக்கமுறை நிலவுகின்றது. ஏனெனில், முகாமைக்காரரும், ஆசிரியர்களும் தங்கள் மாணவர்கள்மட்டிலே தீவிரகவனம் செலுத்திவருகின்றார்கள்."

**திரு. டபிள்யு. டபிள்யு. பிரேமரத்ன,**
குருநாகல் முன்னாள் உபமேயர்.

### சிங்களவர்-தமிழர் ஐக்கியம்

"இலங்கையின் மொழிப்பிரச்சினையை இனிமேலும் அரசியல்வாதிகளிடம் விட்டுவைத்து வேற்றுமையை வளர்க்காமல் சுயபாஷைஆசிரியர்களாகியநாமே இதில்தலையிட்டுச் சுலபமாக இதனைத்தீர்க்க முயலவேண்டும். சிங்கள-தமிழ் மக்களுக்கிடையே மீண்டும் ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டும். கடந்த இரண்டாயிரம்ஆண்டு காலத்துக்குமேல் இருந்துவந்த தமிழர்-சிங்களவர் ஒற்றுமை நம்மிடையே நிலவ ஆசிரியர்சமூகம் பாடுபடவேண்டும்."

**ஆசிரியர் பீற்றர் டி சில்வா,**
லங்கா ஜாதிகுருசங்கப் பொதுக்காரியதரிசி.

### புத்தபிக்கு சொல்லுகின்றார்!

"நாடு சுபீட்சமடைய வேண்டுமானால் நாட்டைப் புராதன காலத்திற்போல ஆட்சிபுரிவதற்கு ஒருசிங்கள அரசனை நாம் தெரிவுசெய்யவேண்டியது அவசியமாகும். தற்போதைய அரசியல்திட்டத்தைத் திருத்தியமைக்கத் தவறுவோமானால் நாட்டிற்குப் பொருத்தமான ஒருபிரதமரைத்தெரிவு செய்வதற்கு நம்மால் முடியாமல்போய் விடும். துட்டகைமுனு, பராக்கிரமபாகுபோன்ற அரசர்களின்காலத்தில் நாடு செழிப்பாகவும், சுபீட்சமாகவும் இருந்தது. ஆனால், இன்று அதைநாம் எதிர்பார்க்கமுடியாமல் இருக்கிறது. நாடுசுபீட்சமடைய மக்கள்ஒருஅரசனைத் தெரிவுசெய்து அவன் தனதுஇஷ்டப்படி ஆட்சிபுரிய அனுமதிக்கவேண்டும்."

**கனம். கொகமடுவ தம்மராம தேரோ.**

### ஐக்கியஇலங்கை ஏற்படும்

"வங்குரோத்தான அரசியல்வாதிகள்தான் ஆங்கிலத்தை ஒழித்துக்கட்டவேண்டுமெனக் கூறுகின்றனர். ஆங்கிலம், சிங்களம், தமிழாகிய மூன்று மொழிகளிலும் இந்நாட்டுமாணவர்கள் தேர்ச்சிபெறுங்காலம் வெகுதூரத்தில்இல்லை. வாக்கெடுப்பு நடத்தினால் கிராமப்புறங்களில்தானும் 90சதவிகித மக்கள் ஆங்கிலம்வேண்டுமென்றே வாக்களிப்பார்கள். பலநிபுணர்களையும் அழைத்துத் திட்டம்தயாரித்தாலும் நாட்டின் அபிவிருத்திக்காக இந்தஅரசாங்கம் எதையும்செய்யவில்லை. ஆயிரக்கணக்காக வேலையற்றிருக்கும் வாலிபர்களின் பொறுப்பைத் தட்டிக்கழித்துத் தன்னைப்பாதுகாப்பதற்காகவே இந்தஅரசாங்கம் அவசரம்அவசரமாகப் பாதுகாப்புச் சட்டதிருத்தத்தை நிறைவேற்றியுள்ளது. சிங்களவர்களானாலும்சரி, தமிழர்களானாலும்சரி இலங்கையரென்று முதலில்எண்ணவேண்டும். ஐக்கியஇலங்கை உருவாகும்நாள் அதிகம்தூரத்தில் இல்லை."

**டக்டர் என். எம். பெரேரா,**
எதிர்க்கட்சித்தலைவர்.

### தமிழரும் கடந்தகால சரித்திரமும்

"தமிழர் தமதுகடந்தகால சரித்திரப்பெருமைகளைப்பற்றிப் பேசுவதிலேயே காலம்கடத்துவதைவிடுத்து, தமது இலக்கியம், கலைகள், பண்பாடு ஆதியன வளர்வதற்கான வழிமுறைகளை ஆராயவேண்டும். தமது குழந்தைகளுக்குத் தற்கால சாஸ்திரங்களாகிய விஞ்ஞானம், பொறியியல்போன்ற சாஸ்திரங்களை விரும்பிக்கற்பித்து, உலகப்போக்கில் அவர்களைப் பங்குகொள்ளச்செய்ய வேண்டும். தமதுகடந்தகால சரித்திரத்தில் மகிழ்ந்துவிடாமல் தம்முடைய எதிர்காலத்தை வளப்படுத்த அதனை உபயோகிக்கவேண்டும்."

**வண. சேவியர்**
**தனிநாயக அடிகள்.**

### மக்களின் விலையேறப்பெற்ற சொத்து

"நாகரீகம்தோன்றிய நாள்தொடக்கம் பனைமரம் நமதுமக்களின் விலையேறப்பெற்ற சொத்தாக இருந்துவந்திருக்கிறது. முற்காலத்திலே யாழ்ப்பாணக்குடாநாட்டில் ஏராளமானபனைமரங்கள் வளர்ந்தன. ஆனால், இவைகள் கண்மூடித்தனமாக வெட்டப்பட்டதினால் இன்று யாழ்ப்பாணக்குடாநாடு வெறும் மணல்வனாந்தரமாகக் காட்சியளிக்கின்றது. பனைமரத்தைக் கவனமாகவளர்ப்பதால் அதிலிருந்து ஏராளமான செல்வத்தைப் பெறமுடியும். பனங்கொட்டையிலிருக்கும்பூரான் புற்றுநோய், சயரோகம்போன்றநோய்களைக் குணப்படுத்தக் கூடியதென்று கண்டறியப்பட்டிருக்கிறது."

**திரு. என். பூரணலிங்கம்,**
வடமராட்சிக் காரியாதிகாரி.

### வறுமையும் இரத்தக்களரியும்

"யு. என். பி. ஆட்சி தனது அதிகாரத்தை எம். ஈ. பி. இடம் ஒப்படைக்கும்போது கொடுத்த சேமிப்புப்பணங்களையெல்லாம் எம். ஈ. பி. மந்திரிகள் வெளிநாடுகளிலே சுற்றுப்பிரயாணம் செய்வதிலும், துறைமுகவேலை நிறுத்தம் காரணமாகக் கப்பல்களுக்கு நஷ்டஈடுகொடுப்பதிலும் அதுவிரயஞ்செய்துவிட்டது. இன்று வேலையில்லாத்திண்டாட்டம் பெருகியிருப்பதோடு நாட்டில்வறுமை, இரத்தக்களரி, பாதுகாப்பின்மைமுதலியன தாண்டவமாடுகின்றன. மனிதஉயிர்களையோ, உரிமைகளையோ மதிக்காமல் திரு. பண்டாரநாயகாவின் தலைமையின்கீழுள்ள எம். ஈ. பி. கட்சி பதவியிலேயே ஒட்டிக்கொண்டிருக்க விரும்புகிறது. நாட்டில்வேற்றுமை தாண்டவமாடுகிறது. வீதிகளிலெவரும் அச்சமின்றி நடந்துசெல்ல முடியாதிருக்கிறது."

**திரு. எம். டி. எச். ஜயவர்த்தன,**
முன்னைநாள் நிதிமந்திரி.

### அரசாங்கத்தின் எதிரிகள்

"இந்தநாடு என்றென்றும் எம். ஈ. பி. அரசாங்கத்தினால் ஆட்சிசெய்யப்படும் என்பதுதிண்ணம். ஏனெனில், இந்தஅரசாங்கம் ஓர்உறுதியான அத்திபாரத்தின்மீது அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துக்கு மூன்றுவிதமானஎதிரிகள் உள்ளனர். மனத்தடுமாற்றம் அடைந்தவர்களைப்போல நடந்துகொள்ளும் தளபதிகள் முதல்எதிரிகள். தனிப்பட்ட சமஷ்டிஅரசாங்கம் கோரும் தமிழர்கள் இரண்டாம்எதிரிகள். சிங்களத்துக்கும், தமிழுக்கும் சமஅந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்று கூச்சல்போட்டுக் கொண்டிருப்பவர்கள் மூன்றாம்எதிரிகள். இந்தமூன்றுகோஷ்டிகளும் ஒன்றுசேர்ந்துகொண்டு எம். ஈ. பி. அரசாங்கத்துக்குக் 'கொடுவினை' புரிய முயலுகின்றன. இதற்குஅரசாங்கம் பயப்படவில்லை. ஏனெனில், அரசாங்கம் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது."

**திரு. எம். பி. டி சொய்சா,**
தொழில்- வீடமைப்பு- சமூகசேவா உதவிமந்திரி.

# கல்வாரி மலையில் கருணையின் ஊற்று

மலைகள், குன்றுகளிலிருந்து நீரூற்றுகள் சுரப்பதாகப் படித்திருக்கிறோம். ஏன்? இதைக்கண்கொண்டு பார்த்துமிருக்கிறோம். மலையிலிருந்து நீரூற்றுகள்சுரந்து ஆறுகளாகப் பாய்வது உண்மை. இந்தஆற்றுநீரால் நாடு வளமடைந்து, பயிர்பச்சைகள் செழிப்படைகின்றன. ஆனால், நான் எடுத்துக்கூறப்போகும் நீரூற்றானது பயிர்களைச் செழிப்படையச்செய்யும் நீரூற்றோ, அன்றேல் நாட்டைவளம்படுத்தும் நீரூற்றோஅல்ல. இந்த அற்புத நீரூற்று மனிதஉள்ளங்களை வளப்படுத்திச் செழிப்படையச்செய்யும் நீரூற்று. கல்வாரிமலையில் ஏற்பட்ட நீரூற்று. இது கடந்த 1958 வருடங்களாக எண்ணிறந்தகோடி உள்ளங்களுக்கு அருள்நீர்பாய்ச்சி வந்திருக்கிறது. இந்தநீரூற்றானது சொல்லிலும், செயலிலும்கெட்டு அழிவுப் பாதையைநோக்கிச் சென்றுகொண்டிருந்த மனிதசமுதாயத்திற்கு வளம் கொடுத்தது. வரண்டபிரதேசம் போலிருந்த மனித இதயங்களைக் கருணை நீர்பாய்ச்சிவளர்த்தது. ஆம், இந்தநீரூற்று இரத்தநீரூற்று, பரிசுத்த இரத்தநீரூற்று, தேவகுமாரன் யேசுவிடமிருந்து சுரந்தநீரூற்று.

யேசுவின் திருஉடலிலிருந்து சொரிந்தஇரத்தம் மனித இதயங்களைக் கழுவிச் சுத்தப்படுத்தும் சீவியசலமாயிற்று. கல்வாரிமலையில் எமதுகருணைவள்ளல் யேசுக்கிறீஸ்துவின் வாயிலிருந்துவந்த வார்த்தைகளே திவ்விய யேசுவினது அன்பின்ஆழத்தையும், அவரதுதியாகசிந்தையையும் எமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. "பிதாவே! இவர்கள் அறியாமல்செய்கிறார்கள்; இவர்களை மன்னியும்" என்றயேசுவின்வேண்டுகோள் எமக்கு எதனை எடுத்துக்காட்டுகிறது? தம்மைக்குரோதமாக வாதித்துச்சித்திரவதை செய்து சிலுவையில்அறைந்த துரோகக்கும்பலுக்கு மன்னிப்புஅளிக்கும்படி தமது பிதாவைவேண்டும் கருணைவடிவின் அன்பை எடுத்துக்காட்டவில்லையா? காய்ந்து கயர்பிடித்த திருவாயை நனைக்க ஒருதுளிதண்ணீர் கொடுக்க மறுத்த கொடியோருக்காகத் தமது பிதாவை இரந்துகொள்ளும் அவரின் இரக்கசிந்தையைக் காணவில்லையா. ஆழ்ந்தநேசம் நமதுஆண்டவனின்திரு உள்ளத்தில் வேரூன்றியுள்ளது என்பதைப் பார்க்கலாம்அன்றோ!

மனிதஈடேற்றமே தமதுஇலட்சியமாகக்கொண்ட திவ்வியயேசுவின் கடைசிமுடிவு கல்வாரிமலைமேல் நடந்தேறியது. அம்மலையுச்சியில் நடைபெற்றஅந்தப்பெரியசம்பவம்தான் இதுவரை பல்லாயிரகோடிமக்கள் அவரை ஓர்தியாகச்செம்மலாக மதிக்கச்செய்தது. கிறீஸ்தவர்களை மட்டுமல்ல, உலகிலுள்ள மக்கள்அனைவரையுமே தம்பால்ஈர்த்துகொள்ளக்கூடிய அன்பின் வாழ்க்கையை யேசுநடத்தினார். அந்தப்புனிதவாழ்வின் இறுதிப்படியிலும் அத்தியாகவாழ்வை அவர்கைவிடாது உறுதியுடன்நின்று உயிர்துறந்தார். தமதுவிலாவை ஈட்டியால் குற்றிப் பிளந்த கொடியவனின் ஒற்றைக்கண் குருடைச்சுகமாக்கி அவனுக்குப் பார்வையளித்தார். ஏங்கித்தவித்துநின்ற தமதுஅன்னையை விழித்து உலகமக்கள் அனைவரையும் அவர்வசம் ஒப்படைக்கிறார். இவையெல்லாம்யாருக்காக? எமக்காகத்தான். கடவுளைமறந்து, உலகசுகபோகங்களே கதியென்று நினைத்து வாழும் ஞானக்குருடர்களாகிய எங்களுக்காகத்தான் திவ்வியயேசு இத்தனையும்அனுபவித்தார். வரண்ட எமது வாழ்வுப்பாதையை வளப்படுத்தவே யேசுகல்வாரிமலையிலிருந்து கருணை நீரூற்றுச்சுரக்கச்செய்தார். எங்களைத் தமதுபிதாவின் வழிசேர்த்து எமது ஆன்மாக்களைச் செழிப்படையச்செய்யவே கல்வாரியிலிருந்து இந்தச்சீவிய நீரூற்றுப் புறப்பட்டது. யேசுவின் திருஉடலிலிருந்து இரத்தமும், தண்ணீருமாகப் புறப்பட்ட நீரூற்றுத்தான் இன்றுவரை கிறீஸ்தவர்களை ஆசீர்வதிக்கும் அன்பின்நீராக இருக்கிறது. கல்வாரிநீரூற்றை நன்றாகப் பயன்படுத்துகிறோமா? இன்றுவரை பாவச்சுழலில்தானே சிக்கிச்சீரழிந்தோம். கல்வாரிநீரூற்று எமக்குக்கிடைத்தும் எமது ஆன்மாவை காய்சீரடையச் செய்யாது சோம்பேறிகளாயிருந்தோம். இனிமேலாவது நாம் கல்வாரிக் கருணைநீரூற்றைப் பயன்படுத்திச் சீரடைந்து நல்லகிறீஸ்தவர்களாக வாழ்வோம்!

**— வ. இ. தனராஜ், வெள்ளவத்தை**

---

### சர்வாதிகார அதிகாரங்கள்

"மக்கள்பிரதமரென்று கூறிக்கொள்ளும் திரு. பண்டாரநாயகா சமீபத்திலே பெருங்கூத்துகளுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பாதுகாப்புச்சட்ட திருத்த மசோதாவின் மூலம் சர்வாதிகார அதிகாரங்களைக் கொண்டுள்ளார். ருஷ்ய ஸ்புட்னிக்கைப்பார்க்கிலும் உணவுப் பொருட்களின்விலைகள் உயர்ந்துகொண்டு போகின்றன. தேங்காயின் விலையைவிடத் தேசிக்காயின்விலை அதிகரித்துவிட்டது. ஆயினும், இந்தஇரண்டும் இலங்கையிலே விளைகின்றவைகள்."

**திரு. ஆர். பிரேமதாச,**
கொழும்பின் முன்னாள் உதவிமேயர்

### கல்விப் பிரச்சினையும் கல்வி மந்திரியும்

"எஸ். எஸ். சி. பரீட்சையில் தாராதரப்பத்திரம்பெற்றுள்ள 60,000 பேருக்கும் பூரணமாக வேலைகொடுக்கும் பிரச்சினையைத் தீர்க்கத்தவறுமிடத்து களுகங்கை ஆற்றில் தானாகவே போய் விழுந்துவிடுவதாகத் தற்போது கல்வி மந்திரியாய் இருந்துவருகின்ற திரு. தஹநாயகா அதிகாரபதவிக்கு வருமுன்தெரிவித்திருந்தார். ஆனால், அவர் தனதுவாக்கைநிறைவேற்றவில்லை. திரு. தஹநாயகா ஓர்ஆற்றில் தானாகப்போய் விழுகிறவரையிலே நாட்டின் கல்விப் பிரச்சினை ஒருபோதுமே தீர்க்கப்படமாட்டாது."

**திரு. நிஸா விஜெரத்தின,**
அப்புக்காத்து கண்டி.

### இருள்சூழ்ந்த எதிர்காலம்

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மக்களுக்குத் துரோகஞ்செய்துவிட்டது. அரசாங்கத்தின்மீது மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். ஒழுங்கீனம், காடைத்தனம், லஞ்ச ஊழல்ஆதியனவே எம். ஈ. பி. அரசாங்கத்தின் பிரதானஅம்சங்களாக இருக்கின்றன. நாளுக்குநாள் இந்தநாடு வங்குரோத்தாகிக்கொண்டு வருகிறது. சகலதுறைகளிலும் நாட்டின் எதிர்காலம் இருள்சூழ்ந்ததாக இருக்கிறது. இந்தப் பேராபயத்திலிருந்து நாட்டைப்பாதுகாக்கப் புத்தெழுச்சிபெற்றுப் புதுச்சீவனோடு இலங்கை அரசியல்அரங்கில் யு. என். பி. பிரவேசித்திருக்கிறது."

**திரு. டட்லி சேனநாயகா**
முன்னைநாள்பிரதமர்

---

● பாப்பரசரால் கூட்டப்படவிருக்கும் திருச்சபைச்சாதாரண திருச்சங்கத்தின் நிகழ்ச்சிக்குறிப்புகளைச் சிந்தஞ்செய்வதையே தனதுகடமையாகக் கொண்ட கருதினால்மாரின் விசேஷ சங்கம்ஒன்றின் நியமனம்பற்றிச் சமீபத்திலே அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# கத்தோலிக்கரான அகதிகளும் கத்தோலிக்க நிவாரணசேவையும்

சர்வதேச கத்தோலிக்கஅகதிகள் கஷ்ட நிவாரண சபையின் தலைவர் அன்று குறிப்பிட்டபோது, "இன்று நமக்குள்ள அதிகம்பெரிய பிரச்சினை யூகோசிலேவியாவிலிருந்து தப்பியோடி வருகின்ற அகதிகளையிட்ட பிரச்சினையே; இவர்களின் தொகை 20,000 பேர் வரையிலாகும்; இவர்களில் மிகப்பெருந்தொகையானோர் கத்தோலிக்கரே; இவர்கள் ஆஸ்திரியா, இத்தாலி முதலாம் நாடுகளில் அடைக்கலம் புகுந்து அவற்றிற்குப் பெரும் பாரச்சுமையாய் இருக்கின்றார்கள்; அவற்றின் பாரச்சுமையைக் குறைக்க ஏனைய நாடுகள் உதவிக்கு வரவேண்டுமெனக் கூறியிருக்கின்றார். கத்தோலிக்க கஷ்டநிவாரண சேவையானது கடந்த பத்துவருடங்களிலும் 3,00,000 பேருக்கு மேற்பட்ட கத்தோலிக்க அகதிகளை வெளிநாடுகளில்கொண்டுபோய்க் குடியேற்றுவதிலே துணைசெய்திருக்கிறது. இவர்களில் சுமார் 2,40,000 பேர் ஐக்கியஅமெரிக்க தேசத்தில் குடியேற்றப்பட்டார்கள். ஹங்கேரியர்களையும், யூகோசிலேவியர்களையும் அதிகமாகக்கொண்ட மற்றும் 25,000 பேரை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குடியேற்றுவதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகின்றது. இன்னும் நோய்வாய்ப்பட்டவர்களும், அங்கவீனர்களும், அசக்தர்களுமான 40,000 பேரை வெளிநாடுகளில் கொண்டுபோய்க குடியேற்றமுடியாதிருப்பதால் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலே அவர்களுக்கு இல்லிடமும், தொழில்களும் தேடிக்கொடுத்து உதவிசெய்துவருகின்றது.

—(⌒)—

# பாப்பரசருடன் தொடர்புபூண்ட ஐந்து பாப்புமார்

தமக்குமுந்திய கடைசியான ஐந்துபாப்புமார்களினதும் பிரதிமைப்படங்கள் பிரேமிட்டுத் தமது பிரத்தியேக நூல்நிலையத்திலே தொங்கவிடப்பட வேண்டுமென்று பரிசுத்த பாப்பரசர் உத்தரவிட்டிருக்கின்றார். பேரான சித்திரகாரரால் தீட்டப்பெற்றுத் தற்போது வத்திக்கான் மாளிகையிலே தொங்கவிடப்பட்டிருப்பவைகளிலிருந்து ஐந்து பிரதிமைப்படங்களை அவர் தெரிவுசெய்து, வத்திக்கான் புனருத்தாரண சிற்பசாலைகளில் கடமைபார்க்கின்ற சித்திரகாரரைக்கொண்டு பிரதிசெய்விக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இந்த ஐந்து பாப்புமாரும் ஏதோ ஒருவிதத்திலே அருளப்ப பாப்பரசரின் வாழ்க்கையிலும், முயற்சிகளிலும் தொடர்பு பூண்டுள்ளவர்கள். அருளப்ப பாப்பரசர் பிறந்தபோது (1) 13-ம் சிங்கராயபாப்பானவர் திருச்சபையை ஆட்சிசெய்துகொண் டிருந்தார். இவர் ஓர்வாலிப குருத்துவமாணவராய் இருந்தபோது அவருடைய முடிசூட்டுவிழா வைபவத்தைக் கண்டுகளித்தார். (2) அர்ச். பேதுருவானவரின் கல்லறைக்குச் சமீபமாக இவர் தமது முதற்பலிபூசையை நிறைவேற்றியதும் அர்ச். 10-ம் பத்திநாதபாப்பானவர் இவருக்குத்தமது ஆசீர்வாதம் வழங்கினர். (3) 15-ம் ஆசீர்வாதப்ப பாப்பானவர் இவரை ரோமாபுரிக்குஅழைத்து, உத்தரவாதமுள்ள பதவிகள் அளித்து, பாப்பரசின் மிஷன்கள் உதவித் தலைமை ஸ்தானத்திலே கடமை பார்க்க வைத்தார். (4) 11-ம் பத்திநாத பாப்பானவர் இவரை ஓர் மேற்றிராணியாராக்கிக் கிறீஸ்துவ கிழக்கு நாடுகளுக்குப் பரிசுத்தஸ்தானத்தின் பிரதிநிதியாக நியமனஞ்செய்தார். (5) 12-ம் பத்திநாத பாப்பானவர் இவரைப் பரீஸ்நகருக்குஅனுப்பி வைத்தபின் ஓர்கருதினலாகவும், வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாகவும் ஆக்கினர்.

—(⌒)—

## சிங்கப்பூரும் கத்தோலிக்கரும்

சிங்கப்பூர்க் கத்தோலிக்கரின் தொகை சென்ற 1958-ம் ஆண்டிலே ஏறக்குறைய 45,000 பேராகிவிட்டது. அகன்றுகொண்டுவரும் இந்நகரின் பல்வேறு பகுதிகளிலே ஏறக்குறைய ஏககாலத்தில் ஆறு பெரிய கோவில்கள் தற்போது கட்டியெழுப்பப்படுகின்றன. இப்படியாக எல்லாம் உடனடியாகத் தொடக்கிக் கட்டப்பட்டுவருவது அந்நகரிலே முன்னில்லாத ஒருசம்பவமாகும். ஒவ்வோர் கோவிலும் ஆயிரம் பேருக்குப்போதிய ஆசனவசதியைக கொண்டிருக்கும். இன்னும் மலாயாவின் ஆரம்பகாலத்திலே பிரபல்யமாகத் தொண்டாற்றிவந்த பிரான்சீஸ்கன் சபைக்குருமார் திரும்பவும்அங்கு வந்து தங்கள் தொண்டுகளுக்கெல்லாம் தலைமைஸ்தானமாகச் சிங்கப்பூரிலே தங்கள் மடாலயம் ஒன்றைக்கட்ட ஆயத்தப்படுகின்றார்கள். தெய்வீக தாய்மையின் பிரான்சீஸ்கன் மிஷனரிமார் அந்நகரிலே முதலாவது கத்தோலிக்க ஆஸ்பத்திரியாகத் தங்கள் பெரிய புதிய ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டுவதற்கு ஏற்கனவே ஆயத்தமாகிவிட்டார்கள்.

---

## ஆஸ்திரேலிய கத்தோலிக்கரின் தேசிய திருயாத்திரை

ஆஸ்திரேலிய கத்தோலிக்கரின் நான்காவது தேசிய திருயாத்திரை ஆஸ்திரேலியாவிலிருந்து அடுத்துநிகழும் 1960-ம் ஆண்டின் ஆனிமாதத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. இந்த யாத்திரிகர்கள் ரோமாபுரி, லூர்துபதி, லிசியேயபதியாகிய பெரிய திருசேத்திரங்களைத் தரிசிப்பதோடு மூனிச்நகரில் நிகழவிருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டுக்கும், ஒபரும்மர்கோவில் நடைபெறவிருக்கும் பெயர்பெற்ற திருப்பாடுகளின் காட்சிக்கும் சமூகமளிப்பார்கள். சர்வதேச சற்பிரசாத மகாநாடு ஒன்றுக்கு அத்தனை மிகப்பெரிய அதிகாரபூர்வமான ஆஸ்திரேலியர்கள் குழுஒன்று சமூகமளிப்பது இதுவேமுதன்முறையாகும். தெற்கு ஜேர்மனியிலே கத்தோலிக்க பவேரியநாட்டின் மத்தியிலுள்ள மூனிச்நகரம் ஓர் பெரிய பட்டணமாகும். திருப்பாடுகளின் காட்சியானது 1633-ம் ஆண்டு கொள்ளைநோய் நடந்தபோது ஒபரும்மர்கோ பட்டினவாசிகள் செய்துகொண்ட நேர்த்தியின் பேரில் பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட்டுவருகிறது. இந்தயாத்திரையிலே 350 பேர் கலந்துகொள்வார்கள். இவர்கள் ரோமாபுரியிலே தங்கியிருக்கும்போது பாப்பரசரின் பேட்டிபெறும் சந்தர்ப்பத்தைக் கண்டுகொள்வார்கள்.

—(⌒)—

## லுத்தேர்சபையாரின் பரிசோதனை

லுத்தேர்சபைப் புரொட்டஸ்தாந்தர்களின் உலகசம்மேளனம் கத்தோலிக்க திருச்சபையுடன் அதிகம்நல்ல இணக்கத்துக்கான முதலாவது இயக்கம் ஒன்றைச் செய்திருக்கின்றதென்று அதன் காரியதரிசியான கனம். டக்றர் காள் லண்டகுயிஸ்ற் தெரிவித்திருக்கின்றார். திருச்சபைச் சாதாரண திருச்சங்க விஷயமாய் அமெரிக்க மினியாப்போலிஸ் நகரிலே அபிப்பிராயம் தெரிவித்தபோது, "அதிகம் ஆழ்ந்ததும், பெரியதுமான ஓர் கிறீஸ்துவஐக்கியத்துக்காகப் பரஸ்பர சித்திகரமான ஓர்ஆராய்ச்சியாக அதனைச்செய்வதிலே யதார்த்தமான ஓர் கரிசனை இருக்குமானல் தாம் அதை வரவேற்பதாகக் கூறினர். லுத்தேர்சபையாரின் இந்தச் சம்மேளனம் "பாவசங்கீர்த்தன ஆராய்ச்சிக்கென்று ஓர் சங்கத்தை நிறுவுதற்கான திட்டங்களைக் கொள்கையளவில் அங்கீகரித்திருக்கின்றது. இந்தச் சங்கம் அதுவிஷயமாய்க் கத்தோலிக்க வேதசாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்யும்.

## போலாந்தின் பொக்ஷங்கள்

போலாந்திலிருந்து இற்றைக்குப் 19 வருடங்களின் முன் கனடாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட பொக்ஷங்கள் திரும்பவும் போலாந்துக்குக் கப்பல்ஒன்றில் கொண்டுசெல்லப் படுகின்றன. இவற்றில் 1,70,000 பவுணுக்கு மேல் பெறுமதியுடையதாய்க் "குட்ரென்பேர்க் பைபிள்" என அறியப்படுகின்ற வேதபுத்தகமும் ஒன்ருகும். போலாந்தின் மேல் ஜேர்மனியர் படையெடுத்தபோது கனடாவிடம் ஒப்படைக்கப்பெற்றுப் போலாந்திலிருந்து அங்கு எடுத்துச்செல்லப்பட்ட 1 கோடியே 70 லட்சம் பவுண் பெறுமதியுடைய பொருட்களில் ஒருபகுதி மாத்திரமே இப்பொக்ஷங்களாகும். இவற்றில் 1320-ம் ஆண்டுக்கும், 1764-ம் ஆண்டுக்குமிடையிலே போலாந்த அரசர்கள் எல்லோரதும் முடிசூட்டு வைபவத்தின்போது உபயோகிக்கப்பட்ட வாள் ஒன்றும்அடங்கும். இந்தப்பொக்ஷங்கள் கடந்த 13 ஆண்டுகளாக ஒற்ருவாநகர வங்கிஒன்றின் நிலவறைகளில் இருந்துவரலாயின.

—(⌒)—

# தேவைப்படாதிருக்கும் அங்கிளிக்கன்சபைக் கோவில்கள்

தேவைப்படாது மேலதிகமாயிருக்கும் அங்கிளிக்கன் சபைக் கோவில்களையெல்லாம் அவற்றைப் பாவிக்கக்கூடிய ஏனைய கிறீஸ்துவசபைகளுக்கு விற்றுவிடத்தக்கதாகச் சட்டத்தில் ஓர் திருத்தஞ் செய்யப்பட வேண்டுமென்று இங்கிலாந்துச்சபையிலே செல்வாக்குடைய ஒரு தொகையான புரொட்டஸ்தாந்த கிறீஸ்துவர்கள் கிளர்ச்சிசெய்துவருவதாகச் "சன்டே டிஸ்பாச்" என்ற தேசிய பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்று தெரிவித்திருக்கின்றது. அவைகளை விற்பதற்கான ஓர் திட்டத்தைச் சட்டம் ஆதரிக்குமானல் குறைந்தபட்சம் அபிஷேகஞ் செய்யப்பெற்றனவாய் 300 அங்கிளிக்கன்சபைக் கோவில்கள் விலைப்படக் கூடுமென அக் கட்டுரை தெரிவிக்கின்றது. வேண்டப்படாத வெறுமையான கோவில்களை நூதனபொருட்காட்சிச் சாலைகளாக அன்றேல் சமூக சேமலாப நிலையங்களாக மாற்றி அமைப்பதைவிட ஆராதனைவழிபாடு நடைபெறும் இடங்களாக விற்றுவிடுவது அதிகம் நலமாகுமென்று இத்திட்டத்தை ஆதரிப்பவர்கள் நம்புகின்றார்கள். பாவனையற்றுக்கிடக்கும் அங்கிளிக்கன்சபைக் கோவில்களைத் தாமதமின்றியே வாங்கத்தயாராயிருப்பது கத்தோலிக்க திருச்சபையேயென்றும், கத்தோலிக்க சனத்தொகை படிப்படியாக அதிகரித்துக்கொண்டுவருவதாலே அதற்குண்டாயிருக்கும் கோவில்களின் தேவை காலந்தோறும் அதிகரிக்கும்போல் இருக்கிறதென்றும் அக்கட்டுரை குறிப்பிட்டிருக்கிறது. தேவைப்படாது மேலதிகமாயிருக்கும் கோவில்களை மறு சபைகளுக்கு விற்றுவிடுவது சம்பந்தமாய் இருந்துவரும் கஷ்டங்களை அகற்றிவிடுமாறு நிகழும்வருடத்திலே அங்கிளிக்கன் மகாசபையில் அதிகமான நெருக்கம் ஏற்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல். —அர்ச். பிரான்சீஸ் சேல்ஸ்

### செப அப்போஸ்தல சபை
### பங்குனி 1959

**பரிசுத்தபாப்பரசர் இம்மாதத்துக்கெனக் குறித்துள்ள கருத்துகள்**

**பொதுக்கருத்து :** பரிசுத்த பாப்பரசரின் பொதுக்கருத்துகளுக்காகவும், விசேஷ கருத்துகளுக்காகவும் வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து :** ஆபிரிக்காவில் திருச்சபைக்கு மிகவும்அவசரமான தேவைகளில்உதவ அநேகர் முன்வரும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
பங்குனிமாதம் 19-ந் திகதி

## பெரியவாரம்

யூதர்கள் பல்வேறுகாலங்களிலே பல்வேறு அரசர்களாலே சிறையாக்கப் பட்டிருந்தபோது அவ்வக்காலங்களில் ஒவ்வோர் மகான் உதித்து, அவர்களையெல்லாம் சிறைமீட்டுச் சுவநாடு கொண்டுபோய்ச் சேர்த்து, சுயஅரசைஸ்தாபித்து, அவர்களைச் சுவாதீனப்படுத்திவிட்டது போல அவர்கள்ரோமருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்திலே எந்தமகானும் உதித்ததுமில்லை. அவர்களைச் சிறைமீட்டுவிட்டதுமில்லை. ஆனால்,மேசியாஎன்னும் ஒருவர்வருவார் ;' அவர் தாவீதரசனின் சந்ததியிலே பிறந்து, தாவீதரசனின் சிம்மாசனத்திலே வீற்றிருந்து, நவரத்தின முடிகவித்து, செம்பொற்செங்கோல் கரந்தாங்கி யூதசனங்களையெல்லாம் ஓர்குடைக்கீழ் பேராய்ப்புகழாய் அரசுசெய்து, வேற்றரசுகளையெல்லாம் வென்றொழித்து, யூதசாதியாரின்வல்லபமும், மகிமையும் அகிலமுழுவதும் இசைக்கச் சலமோன் அரசரைப் போன்று சகலசம்பத்துமுடையவராய், ஞானமுடையவராய் ஆட்சிசெய்துவருவார் ; அந்த மேசியாஎன்னும் யூதமன்னர் வருவது எக்காலமோவென்று அவர்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள்.

அவர்கள் ஆசித்துக்காத்திருந்த மேசியா அவர்களிடையே தோன்றினர். தாவீதரசனின் இராசகுடும்பத்திலே பிறந்தார். ஆனால்,யூதர்கள் காத்திருந்தது போலக் கருமம் நிகழவில்லை. அவர்கள் மேசியாவுக்குப் பொருத்திக்கூறிய இலட்சணங்கள் அவருக்குப்பொருந்தவில்லை. எல்லாம் முழுஎதிராகநிகழ்ந்தன. யூதர்கள் தமது உலகஈடேற்றத்தைநினைந்து மேசியாவை எதிர்பார்த்திருக்க, அவர்கள் காத்திருந்தமேசியா உள்ளபடியேவந்து அவர்களின் ஆன்மஈடேற்றத்துக்கு வழிகாட்டினார். அவர் உலகஇராச்சியத்தை அல்ல, ஞானஇராச்சியத்தை ஸ்தாபித்தார். உலகஇராசரீகத்தை அல்ல, ஞானஇராசரீகத்தையே நிறுவலானார். சரீரஇரட்சணியம் அல்ல, ஆன்மஇரட்சணியமே உசிதமானது, சிரேஷ்டமானதென்றுபோதித்தார். உலக வெகுமான சலாக்கியங்கள் அல்ல, சுகசெல்வபாக்கியங்கள் அல்ல, தாழ்மையே, தரித்திரமே, தபமே, செபமே, பாடுகளே, பீடைகளே மிகமேலானவையென்று படிப்பித்தார். மனிதன் உலகமுழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தனது ஆத்துமத்தை இழந்துபோவானாகில் அதனால்வரக்கூடிய பலனென்னவென்று புத்திகற்பித்தார்.

மேசியா தாவீதரசனின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பாரென்று யூதர்கள்காத்திருக்க, அவரோ அவர்கள்புடைசூழ ஓர் முரிந்த நாற்காலியையும், மூவைந்தடிநீளமான ஓர்சிலுவையையும் தமது சிம்மாசனமாக்கிக்கொள்ளலானார். தாவீதரசனைப்போல ஓர் நவரத்தினமுடி சூடுவாரென்று அவர்கள்காத்திருக்க, அவரோ கூரியமுண்முடியைச் சூடலானார். அரசருக்குரிய பட்டுப்பீதாம்பரங்களை அணிவதற்குப்பதில் சிகப்புச்சகலாத்தை அணியலானார். உலகமுழுவதையும்தாங்கி அரசுசெய்வாரென்றிருக்க, பாரச்சிலுவைதாங்கி வீதியிலே நடந்துபோனார். பயங்கரவேதனைகள், பாடுகளை அனுபவித்துக் கடைசியாகச் சிலுவையில்அறையுண்டு சீவபலியானார். தேவகோபத்தை ஆற்றவும், மனுக்குலத்துக்கு விதிக்கப்பட்ட தேவதண்டனையைப் போக்கவும், தேவநீதிக்கு உத்தரிக்கவுமாகத் தேவகுமாரன் பெருநிந்தைஅவமானங்கள், கொடியபாடுவேதனைகளை அனுபவித்துச் சிலுவைபிற்பலியானார்.

தபசுகாலத்தின் கடைசிவாரமாகிய பரிசுத்தவாரம் வருகின்றது. மனிதசந்ததியார் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இரட்சணியமகாசம்பவம் நடந்தேறியது இப்பெரியவாரத்திலேயாகும். இற்றைக்குப் பத்தொன்பதுநூற்றாண்டுகளின்முன் நமது இரட்சாபெருமானின் திருச்சிலுவைமரணம் நடந்தேறியது இம் மகாவாரத்திலேயாகும் ; ஆதித்தாய்தந்தையர் கட்டிக்கொண்ட பாவத்தினாலே அடைபட்டிருந்த மோட்சகபாடம் திறபட்டதும், தேவகுமாரன்சிந்திய திருக்குருதியாலே தேவன் மனிதர்மேல் கொண்டிருந்தகோபம் சாந்தியானதும் இந்தப்புனிதவாரத்திலேயாகும். ஆகவே, இந்தவாரத்திலே நம்திருமீட்பர் பூங்காவனமுதல் கல்வாரிமலைஈறாகப் பட்ட திருப்பாடுகளையும், அவரது சிலுவைமரணத்தையும், இவ்வாரத்திலே கோவில்களில்நிகழும் திருச்சடங்குகளையும் தியானித்து நமதுபாவங்களுக்காக மனஸ்தாபக்கண்ணீர்சொரிந்து, பாவப்பரிகாரஞ்செய்வோமாக !

### அர்ச். அந்தோனியார் கோவில் ஞானவொடுக்கம்

பாஷையூர், அர்ச். அந்தோனியார் கோவிலையும், பாண்டியந்தாழ்வு, சந்தானமாதா கோவிலையும், கொழும்புத்துறை, அர்ச். செபமாலைமாதா கோவிலையுஞ் சேர்ந்த சகல கிறிஸ்தவர்களினதும் தபசுகால ஞானவொடுக்கம் இம் மாதம் 18-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி நடைபெறுகிறது. அடுத்த 25-ந் திகதி புதன்கிழமை முடிவடையும். மதுரை மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. ரி. எஸ். தைரியம் சுவாமியவர்கள் ஞானஒடுக்கபோதகஞ் செய்கிறார்.

**TUITION**
IN
SHORTHAND-TYPEWRITING
Students (either sex) prepared for Pitmans London, London Chamb. of Comm. and other Examinations. Students already trained are in Govt. Service, Firms, Schools and other Institutions.
CHARGES MODERATE
SUCCESS GUARANTEED
JOSEPH ANDREW
"Mazenod House"
4th Cross St., Jaffna.

## சுதேச வர்த்தமானம்

### நம்பத்திரிகை

பரிசுத்த வாரத்தையிட்டு வழமைபோலநம்பத்திரிகை வருகிற 26-ந் திகதி வியாழக்கிழமை வெளிவரமாட்டாது. அடுத்தசித்திரை மாதம் 2-ந் திகதி வியாழக்கிழமையே வெளிவரும்.

### நமது அச்சகம்

பரிசுத்தவாரத்தையிட்டு இம்மாதம் 25-ந்திகதிபுதன்கிழமை மத்தியானந் தொடக்கம் 30-ந்திகதி திங்கட்கிழமை முடிகிறவரையிலே நமது அச்சகம் மூடப்பட்டிருக்கும். 31-ந்திகதிசெவ்வாய்க்கிழமையே மறுபடி வேலை ஆரம்பமாகும்.

### பரிசுத்த அடைக்கலமாதா கோவில்

யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலமாதா கோவிலிலே ஆறும் வெள்ளிக்கிழமைப்பக்தியனுசாரம வழமைபோல இம்முறையும் தபசுகாலத்தின் ஆறும் வெள்ளிக்கிழமையாகிய நாளைவரும் 20-ந் திகதி பிற்பகல் 6-30 மணிக்குத் திவ்வியசற்பிரசாத ஆசிர்வாதத்துடன் ஆரம்பமாகித் திருச்சிலுவைப்பாதை, பிரசங்கம், கல்லறைஆண்டவர் வணக்கம் ஆதியவற்றுடன் முடிவாகும்.

### குருப்பிரசாதிகளின் பிரயாணம்

வண. சி. ஜோண்மேரி, வண. ஏ. வாசென்பேக், வண. ஈ. டேலாஹேற, வண. ஏ. மூயே, வண. ஏ. சியேர்ப்கா எனும்குருப்பிரசாதிகள்ஐவரும் சுகம் நோக்கி விடுமுறையிலே இம்மாதம் 21-ந்திகதியாகிய வருகிறசனிக்கிழமை கொழும்பிலேகப்பலேறித் தங்கள்சுவநாடுகளுக்குப் பயணமாகவிருக்கின்றார்கள். வண. ஜே. ஸ்கூர்மன்சுவாமியவர்கள் சுகத்தாழ்வு காரணமாகச் சென்றவாரமே செல்லலாயினர்.

### சுதந்திரக்கட்சி மகாநாடு

பிரதமர்பண்டாரநாயகாவைத் தலைவராகக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிமகாநாடு இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளிலே குருநாகலில் நடைபெறவிருந்தது. ஆனால், அநேகமந்திரிகளும், கட்சியைச்சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்களும் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டியிருப்பதை முன்னிட்டு மகாநாட்டை அடுத்தவைகாசிமாதம் 16-ம், 17-ம்திகதிகளிலேநடத்துவதென்று கட்சியின்காரியக்கமிற்றி தீர்மானித்திருக்கிறது. அந்தமாவனல்லஎம். பி. திரு. சி. ஆர். பெலிகம்மன என்பவரைக் கட்சியிலிருந்து நீக்கிவிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### வடமாகாணத்தில் நெசவாலை

ஒன்றரைக்கோடிரூபா மூலதனத்துடன் வடமாகாணத்திலே நெசவாலை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. பகிரங்க வரையறை ஸ்தாபனம் ஒன்று இதற்கானஏற்பாடுகளைச் செய்துவருகிறது. இந்தத்தொழிற்சாலை தொழிற்படமிடத்து வருடம்ஒன்றுக்கு 75லட்சம்யார் புடவைத்துணிகளை உற்பத்திசெய்யும். இதனை அமைப்பதற்கான ஆரம்பவேலைகள் பூர்த்தியடைந்து, ஏனையமுயற்சிகள் தீவிரமாகநடைபெறுவதாகத் தெரியவருகிறது. இதனை அமைக்கும் ஸ்தாபனத்தால் அழைக்கப்பட்ட பருத்திச்செய்கை நிபுணர்கள் துணுக்காயிலும், அதனையடுத்த பகுதிகளிலும், கிழ்மாகாணத்திலும் பருத்தியை நன்கு செய்கைபண்ணலாமென அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். இதனை ஆதாரமாகக்கொண்டு துணுக்காயிலே பத்தாயிரம்ஏக்கர்நிலம் அரசாங்கத்திடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நெசவாலை வல்லைவெளியிலே அமைக்கப்படும். அங்கே இதற்கென மூன்னூறு ஏக்கர்நிலம் வாங்கப்பட்டிருக்கிறது.

### தனிச்சிங்கள கடிதஉறைகள்

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க காரியாலயங்களை முற்றுகையிட்டிருக்கும் தனிச்சிங்கள கடிதஉறைகளையிட்டு எதிர்ப்புணர்ச்சி பிறந்திருக்கிறது. அரசாங்கஅதிபரின் பெயர்குறிப்பிட்டுக் கச்சேரியிலிருந்தும், மற்றும் இடங்களிலிருந்தும் அனுப்பப்படும் இக்கடிதஉறைகளை எவ்வாறுபகிஷ்கரிக்கலாமென்பதுபற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது. தென்னிலங்கையிலுள்ள அரசாங்க காரியாலயங்களிலிருந்தெல்லாம் தமிழ், சிங்களம், ஆங்கிலமாகிய மும்மொழிகளிலும் அச்சிடப்பட்ட கடிதஉறைகள் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுவரும்போது வடபகுதியில்மட்டும் தனிச்சிங்கள கடிதஉறைகள் பாவிக்கப்படவேண்டிய காரணமென்னவென்று கேட்கப்பட்டுவருகிறது.

### கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞானவொடுக்கம்
### 1-4-59 — 5-4-59

கத்தோலிக்க பாடசாலை ஆசிரியைகளின் வருடாந்த ஞானவொடுக்கம் வருகிற சித்திரைமாதம் 1-ந் திகதி புதன்கிழமை சாயந்தரம் வழமைப்பிரகாரம் இளவாலைக் கன்னியர் மடத்திலே ஆரம்பமாகும். ஆசிரியைகளுக்கெனப் பிரத்தியேகமாக நடைபெறும் ஞானவொடுக்கத்தில் பங்குபற்றுதல் ஒவ்வொரு கத்தோலிக்க ஆசிரியைகளதும் முக்கிய கடமையென்பதைத் தெரிவிக்கிறோம். மேற்படி ஞானவொடுக்கத்தில் பங்குபற்றுவோர் மாகாணச் சிரேஷ்ட தாயார், திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரத்தோடு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிலிப் பொன்னையா,
*கத். பாட. பொதுமுகாமைக்காரர்*
*யாழ்ப்பாணம் 16-3-59*

### இலங்கை வானொலியில் பெரிய வெள்ளிக்கிழமை

பெரியவெள்ளிக்கிழமை (27-3-59) காலை 8-30 மணிதொடக்கம் 9-30 மணிவரையும் "அர்ச்சிக்கப்பட்ட சிலுவை" என்னும்நிகழ்ச்சி இலங்கைவானொலித் தேசியஒலிபரப்பில் வண. சந். என். குருஸ்சுவாமி அவர்கள் தலைமையில் வங்காலை அர்ச். சிசிலியாசபைப் பாடகர்குழாத்தினரால் நடத்தப்படும். பரிசுத்தவாரத்தில் நமதுதிவ்விய இரட்சகராகிய யேசுக்கிறீஸ்துநாதரின் திருப்பாடுகளையிட்டுத் தியானிக்கவிரும்பும் பக்தியுள்ளகிறீஸ்தவர்களுக்கு இவ்வானொலிநிகழ்ச்சி மிகுந்தபலன் உடையதாயிருக்கும் என்று நம்புகிறோம்.

### வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி

எதிரேவரும் ஈஸ்றர்பண்டிகையை முன்னிட்டு இலங்கை வானொலித் தேசிய ஒலிபரப்பில் 27-3-59 பெரிய வெள்ளிக்கிழமை மாலை 6-25 முதல் 6-45 வரை ஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளை அவர்களின் குழுவினரால் "சீமோன் கண்ட சிலுவைப்பலி" என்றவிசேட இசைச்சித்திரநிகழ்ச்சி நடாத்தப்படும்.

# துன்பப்படும் திருச்சபைக்காகப் பரிசுத்தபாப்பரசரின் செபம்

நித்தியபிதாவின் குமாரனுன யேசுவே! திருச்சபையானதுமகிமையும், மாசின்மையும்பொருந்தியதாய் உமதுதிருச்சந்நிதானத்தில் விளங்கும்படியும், அதனை அர்ச்சிக்கும் பொருட்டும் தேவரீர் அதில் அன்புகூர்ந்து, அதற்கு உம்மை அர்ப்பணித்தீரே! உலகின் பலபாகங்களிலும், விசேஷமாக மாபெரும் சீனதேசத்திலும் இப்பொழுது உமது ஞானப்பத்தினியாகிய திருச்சபைபடும் உபத்திரவங்களைக் கருணையாக நோக்கியருளும்.

ஆண்டவரே! உமது விசுவாசிகளின் ஆத்துமங்களுக்கு இடப்பட்டிருக்கும் கண்ணிகளையும், இவ்வுலகிற்குச்சாராத உமது இராச்சியத்தையும், சுவிசேஷஉண்மைகளையும், பரப்ப ஆவல்கொள்ளும் உமது ஞானமேய்ப்பர்களுக்கும், குருமாருக்கும், விசுவாசிகளுக்கும் விரோதமாகச் சாட்டப்படும் அபாண்டமான குற்றச்சாட்டுகளையும் காண்கிறீரே. உண்மைக்கும், அதிகாரத்திற்கும், இரட்சணியத்திற்கும் ஏகமத்திய இருப்பிடமாகவிளங்கும் இராயப்பரின் ஸ்தானத்திலிருந்து ஆங்காங்குள்ள ஞானமேய்ப்பர்களையும், கிறீஸ்துவ சமுதாயங்களையும் பிரிப்பதற்கும், ஒன்றுனதும், பரிசுத்தமானதும், பொதுவானதும், அப்போஸ்தோலிக்கம் பூண்டதுமான றேமான்கத்தோலிக்க சபையாகிய உமதுஞானப்பத்தினியின் தையலற்றஅங்கியைக் கிழிப்பதற்கும் செய்யப்படும் இடையருத நாசமுயற்சிகளைத் தேவரீர்அறிவீரே. இத்தகைய கோரக்காட்சிகளைப் பார்க்கிறநாங்கள் தேவரீருக்குஎதிராகச் செய்யப்படும் குற்றங்களை மன்னித்தருளும்படி விசேஷவிதமாய் வேண்டுகின்றேம்.

முன்னெருநாள் தமாஸ்குஸ் பாதையில் சென்றுகொண்டிருந்த சவுலுக்கு: "சவுலே, சவுலே, ஏன் என்னை உபாதிக்கிருய்?" என்று கூறியவசனம் அன்றும், அதன்பின்பும் கூறக்கூடியதாய் இருந்ததுபோல இன்றும் கூறக்கூடியதாய் இருக்கின்றதே. தேவரீர் சிலுவையில் இருந்து, 'பிதாவே! இவர்கள் அறியாமற்செய்கிருர்கள், மன்னித்தருளும்" எனப் பிரார்த்தித்த உந்தத வேண்டுதல்சதாபலன் அளிக்குமென நம்பியிருக்கிறேம், உமதுபலியானது மக்கள்அனைவருடையவும் ஈடேற்றத்திற்கு ஊற்றணியாய் விளங்குவதுபோல உமதுஞானப்பத்தினியும், எமதுதாயுமாகிய திருச்சபை விசுவாசத்திற்குச் சாட்சியமாக உலகின் பல்வேறுபகுதிகளில் அநுபவிக்கும் துன்பதுரிதங்கள் உமது அருளினல் சகலமக்களுக்கும் இரட்சணியத்திற்கு ஏதுவாகும்படி செய்தருளும்.

சமாதானத்தின் தேவனே!

மேற்றிராணிமாரும், குருமாரும் சந்நியாசரும், கன்னியரும், கிறீஸ்தவர்களும் "தூயஆவியின் ஐக்கியத்தைச் சமாதானபந்திப்பில் பாதுகாக்க" எங்கும் எப்பொழுதும் கவலையாயிருப்பார்களாக. "பரிசுத்தபிதாவே, நாம் ஒன்றுயிருப்பதுபோல அவர்களும் ஒன்றுயிருக்கும்படி நீர் எனக்குத் தந்தவர்களை உமதுபெயரால் காத்தருளும்" என நீர்விடுத்த அன்பின் உந்நதகட்டளையின் பொறுப்பைஉணருகின்ற ஏகபொதுமேய்ப்பராகிய பாப்பானவருடைய கட்டளைக்கு ஆயரும், மந்தைகளும் அமைந்தொழுகுவதற்கு விரோதமான மனிதரின் எல்லாவித தந்திரசூழ்ச்சிகளையும் உமது சர்வவல்லமை தோற்கடிப்பதாக.

ஈற்றில், எங்கள்இரட்சாபெருமானே! முழுத்திருச்சபையினதும், வேதபோதகநாடுகளினதும்மகிமைபொருந்திய இராககினியும், தேவரீரதும், எங்களதும் மாதாவுமாகிய மரியாயின்பெறுபேறுகள், மன்றாட்டங்களையும் நோக்குவது மாத்திரமல்ல, தேவரீருக்காக வீரச்சாட்சியம் கொடுத்தவர்களும், கொடுக்கிறவர்களுமாகிய எண்ணிறந்த சுவிசேஷதூதுவர்களுடைய பிரயாசைகள், பரித்தியாகங்கள், இரத்தஞ்சிந்துதல்களையும் கருணையாகநோக்கியருளும்.

எங்கள்நாயகரும், யுகங்களினதும் மக்களினதும் நித்தியஅரசருமாகிய உம்மில்அல்லாமல் வேறுஎவரிலாவது எமக்குநம்பிக்கையும், வெற்றியும், சமாதானமும் இல்லையாகையால் அநேகரின்பாவங்களுக்குப் பரிகாரமாகத் தேவரீர்சிந்திய விலைமதிக்கப்பெருத திருஇரத்தத்தை எல்லாவற்றிற்கும்மேலாக நினைவுகூர்ந்து சீனதேசத்திற்கும், முழுஉலகத்திற்கும் உமதுசமாதானத்தைக் கொடுத்தருளும். ஆமென்.

—※—

## கிளிநொச்சிப் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி

கரைச்சிப்பகுதியிலுள்ள பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டி சென்றசனிக்கிழமை நடைபெறலாயிற்று. இப்போட்டியிலே அரசினர் பாடசாலைகளுட்படப் பல பாடசாலைகள் கலந்துகொண்டன. இதில் செந்தெரேசா மாவித்தியாலயம் முதன்மைபெற்றது. மத்திய, சிரேஷ்ட பிரிவுகளில் திறமைத்தானங்களையும், மொத்தவிளையாட்டுகளில் கூடுதலான புள்ளிகளையும் பெற்றுள்ளது. ஏனையபாடசாலைகள் பெற்ற புள்ளிகளைவிடக் கூடுதலாக 146புள்ளிகளைப்பெற்று மொத்தமாகவழங்கப்பட்ட பன்னிருவெள்ளிப்பரிசுக்கிண்ணங்களில் ஒன்பதைப்பெற்றதுடன் மதிப்புக்குரிய சுற்றுப்போட்டிக் கேடயத்தையும்பெற்றது. கரைச்சிப்பகுதியில் ஆசிரியர்சங்கத்தினல் முதன்முதலாகநடத்தப்பட்ட இந்தவிளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி செந்தெரேசா மாவித்தியாலயமும், உருத்திரபுரம் பத்திமா பாடசாலையும் சிறப்பான இடம் பெற்றமை பாராட்டத்தக்கதாகும்.

● இன்னும்ஒருமகாயுத்தம் மூண்டு கொள்ளுமானல் அதன்முடிவு முதலாளித்துவத்தின் வீழ்ச்சியாகுமென்று ருஷ்யபிரதமர் நிகிதா குருஷேவ் சென்ற 3-ந்திகதியன்று லீப்சிக்நகரிலே நடைபெற்றகூட்டம்ஒன்றில் கூறியிருக்கின்றார். புதியயுத்தம் ஏற்படுமானல் சிறியகாரணத்தைக்கொண்டும் அதைத்தொடக்கலாம்; இந்தயுத்தத்தின்முடிவு முதலாளித்துவத்தின் வீழ்ச்சியாகத்தான் இருக்குமென்று உரத்தகுரலில் அவர்கர்ச்சிக்கலாயினர்.

---

● இந்திய அரசாங்கம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தான்பட்ட கடன்களுக்கு வட்டியாகமட்டும் வருடமொன்றுக்கு 140 கோடிரூபாசெலுத்திக்கொண்டிருப்பதாக லோகசபையில் இந்தியவருமானமந்திரி பீ. கோபால் ரெட்டி தெரிவித்திருக்கின்றார். அதனல் மத்தியஅரசாங்கம் இராச்சிய அரசாங்கத்துக்கு அபிவிர்த்திவேலைகளுக்காக வட்டியின்றிக் கடனுதவிகள் செய்வதுஇயலாதென அவர்கூறியிருக்கின்றார்.

யாழ்ப்பாணம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே

### மேற்றிராணியாண்டவரால்

## பரிசுத்தவாரத் திருச்சடங்குகள்

1959 பங்குனி 22-ந் திகதி குருத்துஞாயிறு

காலை 7-30 மணிக்குக் குருத்தோலைகள் ஆசீர்வதித்தல்.

,, பங்குனி 26-ந் திகதி பெரிய வியாழக்கிழமை

காலை 6-30 மணிக்குப் பரிசுத்த தைலங்கள் ஆசீர்வதித்தல்.

மாலை 6 மணிக்கு மேற்றிராணியாண்டவரால் பெரியபாடற்பூசை.

மாலை 6 மணிக்குச் சஞ்சுவாம் கோவிலில் பூசை.

,, பங்குனி 27-ந் திகதி பெரிய வெள்ளிக்கிழமை

பிற்பகல் 4 மணிக்கு அர்ச்சித்துவைத்த சற்பிரசாதப்பூசை.

திருச்சிலுவை ஆராதனை.

,, பங்குனி 28-ந் திகதி பெரிய சனிக்கிழமை

மாலை 10-30 மணிக்குப் பாஸ்கா விழிப்புத் திருச்சடங்குகள்.

,, பங்குனி 29-ந் திகதி

காலை 5-30 மணிக்குத் தனிப்பூசை.

காலை 7-30 மணிக்குப் பெரிய பாடற்பூசை.

காலை 8-30 மணிக்குத் தனிப்பூசை.

கட்டளைக்குரவர்

---



## மகனே! உனக்காக

"ஜெயம்"

பால்வடியுந் திருவதன மருளின் பீடம்
பார்வையிலே கருணைரசம் ஞானத் தேக்கம்
ஆலினைப்போ லனைவரையு மணைத்துச் சேர்க்கும்
அன்புநிழல் துன்பதுய ரகற்றுஞ் சோதி
சிலமெலா மோருருவாய்த் திரண்டு கூடிச்
செய்யதிரு மலரடியிற் றவங் கிடக்கும்
கோலமணிப் பொன்னுடலோன் கொலைஞன் போலக்
குனிந்துசிரங் கூம்பிநிற்குங் கொடுமை யேனே?

●

ஆரம்போற் கண்டத்திற் கயிற்றைப் பூட்டி
ஆகடியஞ் செய்திடுவெம் புலியின் கூட்டம்
சோரனிவன் சதிகாரன் கொடியோ னென்று
சொற்களினற் கொலைசெய்யப் புருவை போல
ஆர்முகமும் நோக்காது அமைதி பொங்க
அன்றலர்ந்த மலர்போலும்' பிரபை தேங்கப்
பாரமரக் குருசுதனைத் தோளிற் றங்கிப்
பாசமுடன் அணைத்துநிற்குங் கொடுமை யேனே?

●

கழைக்கோலைச் செங்கோலாய்க் கரத்திற் கோத்துக்
கண்மலரைக் கந்தையினல் மறைத்த போதும்
அழுத்திடுமோர் முண்முடியின் முனைகள் பீறி
அன்புதிர மாறுகிச் சொரிந்த போதும்
இழுத்தலைத்துத் தசைகிழியச் சிதைத்த போதும்
இரும்பாணி கீண்டிடவும் மௌனங் காத்துப்
பழுத்தமரக் கிளைபோலத் தலையைச் சாய்த்துப்
பரமதிரு மகன்வாடுங் கொடுமை யேனே?

---

## வியாகுலமாதாவும்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இவ்விதமாக எங்கள்பாவஅக்கிரமங்களை வியாகுலத்தாயாருக்கு அறிக்கையிட்டு, அவமூலம் நமது இரட்சகரின் தயவை வேண்டுவோமாக! மாதாவின் கண்ணீரை மக்கள் மனஸ்தாபக்கண்ணீரால் துடைக்கவேண்டாமா? அவவோ தேவப்பிள்ளை. நாங்களோ பாவப்பிள்ளைகள். என்றாலும் சிலுவையடியில் நின்றபொழுது எங்களைத் தமதுபிள்ளைகளாக ஏற்றுக்கொண்டாவே. ஆகவே, குற்றுயிராய்க்கிடக்கும் மௌனதிருச்சபைக்காக நாங்கள் மனஸ்தாபத்துடன் வேண்டுதல் செய்யும்போது, அவ தப்பாது அதைஅருளுவா. அதற்கு ஆறுதலையும், தேறுதலையும்கொடுப்பா. அவவுடையவேண்டுதலினல் சிலுவையின்பாடுகள் நீங்கிமோனதிருச்சபை ஜெயவிருந்தேந்தி மறுபடியும் மகிமைப்பிரதாபத்துடன் எழுந்துநின்றிலங்கும். அந்தக்காலத்தை நாம் தபத்தினலும், செபத்தினலும் தீவிரிக்கச்செய்யலாம்!

— சூ. அ.

---

● பிலிப்பைன்ஸ்நாட்டின் காடுகளிலே தலைமறைவாய்இருந்தவரும் இரு ஜப்பானியர்களுக்கு இரண்டாவது உலகயுத்தம் முடிந்துவிட்டதென்ற செய்தி இன்றுமேதெரியமாட்டாதாம். அவர்களுக்கு இதனைஅறிவித்து அவர்களைத்திரும்ப ஜப்பானுக்கு அழைத்துவருவதற்காக அவ்விருவரினும் ஒருவரின்தாயான 73வயதுடைய ஜப்பானியமாது பிலிப்பைன்ஸ்நாடு சென்றிருக்கின்றார்.

கச்சதீவு

## அர்ச். அந்தோனியார் திருநாள்

நெடுந்தீவுப் பங்கைச்சேர்ந்ததும், தென்மேற்கே சமுத்திரமத்தியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து 50 மைலுக்கப்பால் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே ஒருபாலம்போன்று விளங்குவதுமான கச்சதீவுப்பதியில் கோயில்கொண்டிருக்கும் கோடியற்புதராம் அர்ச். அந்தோனியாரின் திருநாள் வழமைப்பிரகாரம் 5-3-59 வியாழக்கிழமை கொடியேற்றத்துடனும், நெடுந்தீவுப்பங்குக்குரவர் வண. ஜோண் சிங்கராயர்சுவாமியவர்கள் ஆற்றிய "யாத்திரிகர்பலனடையச்செய்யவேண்டியனயாவை?" என்றஉணர்ச்சியூட்டும் பிரசங்கத்துடனும் ஆரம்பமாகியது. தொடர்ந்து திரிதினஆராதனை நடைபெறலாயிற்று.

யாத்திரிகருக்கான தண்ணீர்ப் போக்குவரத்துமுதலாம்பலவசதிகளும் ஏற்கனவே சித்தஞ்செய்யப்பட்டிருந்ததுடன் தேவையானவைகளை உடனடியாகஅறிந்து உதவிபெறக்கூடியவகையில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்ததும், பொலிஸ்சேவையும் பாராட்டப்படத்தக்கனவாகும். இயந்திரப்படகுகள் தங்கும்தென்துறையில் 5 அடிஉயரமான மாதாவின் சுரூபம்ஒன்று இவ்வருடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. யாத்திரைத்தலத்தில் எங்குநோக்கினும் புனிதசின்னங்களே காட்சியளித்து மக்களைப் பக்திப்பரவசத்தி லீடுபடச்செய்தன.

7-3-59 சனிக்கிழமை சாயந்தரம் யாத்திரைத்தலம் எதிர்பாராதவிதமாய் என்றுமில்லாதவகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், தீவுபற்றுகளிலும், ஏனையதூர இடங்களிலுமிருந்துவந்த நாலாயிரவருக்குமேற்பட்ட யாத்திரிகரால் தேங்கியது. அவர்களின் ஆன்மவிசாரணைக்குப் போதியகுருமார் இல்லையேயென்று பங்குக்குரவருடன் பலரும் பலவாறுசிந்தித்திருக்கையில் காத்திராப்பிரகாரம் தென்னிந்தியாவிலுள்ள தங்கச்சிமடத்தின் உதவிப்பங்குக்குரவர் வண. யே. யோசெவ் சேவியர்சுவாமியவர்கள் சிறுநாவாய்மூலம் திருப்பதியைஅடைந்து யாத்திரிகரின் ஆன்ம, சரீரநலன்களை விசாரித்துவந்தார்.

'குடும்பசீவியத்தின் பாதுகாவலர் அர்ச். சூசையப்பர்...' 'தேவநற்கருணை ஆத்துமங்களின் திவ்வியபோசனம்...' 'சிநேகிதா! ஏன்வந்தாய்?...' 'இராயப்பர் வெளியேசென்று விம்மி விம்மிஅழுதார்...' 'என்னோடுதுக்கித்து எனக்கு ஆறுதல்செய்யக்கூடிய ஒருவரைத்தேடியும் நான்காணவில்லை...' 'விசுவாசம் ஆத்துமஇரட்சணியத்தின் ஏணி' அர்ச். அந்தோனியார் விசுவாசத்தினால் உயர்த்தப்பட்டார்...' என்னும்பீடிகைகளுடன் அர்ச். சூசையப்பர் கெபிமுன்பாகவும், திருமணித்தியாலத்தின்போதும், திருநாட் பாடற்பூசையின்போதும் இருகுரவர்களாலும் செய்யப்பட்ட அரியபிரசங்கங்கள் எவர்மனதையும் அருட்டிவிடலாயின.

திரிதினஆராதனையின் இறுதித்தினமாகிய சனிக்கிழமைசாயந்தரம் அர்ச். சூசையப்பர் கெபியைநோக்கி மெழுகுவர்த்திஊர்வலத்துடன் மாலைஆராதனை ஆரம்பமானது. ஊர்வலம் புனிதவளனின்கெபியைச்சேர்ந்து அவர்அடைக்கலத்தில் ஒவ்வொருவரையும் ஒப்படைத்து அவர்அருளை இரந்துமீண்டது. ஆலயஅண்மையில் பிரத்தியேகமாய்த் தயாரிக்கப்பட்டிருந்த அழகிய மேடைமீது அமைக்கப்பட்டபீடத்தில் திவ்வியசற்பிரசாதம் எழுந்தேற்றம் பண்ணப்பட்டுத் திருமணித்தியால ஆராதனை நடைபெறலாயிற்று. ஈற்றில் 'வேஸ்பர்' என்னும் மாலைஆராதனை பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டதும் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபம் இதற்கெனச்சித்தஞ்செய்யப்பட்ட அழகியபுதிய சேடையமொன்றில்வைத்துப் பாவலர் பாமாலைசூட பக்தர்கள் செபமாலைஓத வீதிவலமாகக் கொண்டுவரப்பட்டதும் கட்டளைக்குரவரால் திருச்சுரூபஆசீர்வாதம் அருளப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4மணிக்கு நிறைவேறிய பாடற்பூசையில் அநேகர் திருவிருந்தருந்தினர். அர்ச். அந்தோனியாரின் கடைசிஆசீரைப்பெற்றதும் மக்கள் இயந்திரமோட்டர்ப் படகுகள் மூலம் சேமமே தத்தம் பதி செல்லலாயினர்.

— ஜி. ஏ. நெடுந்தீவு.

---

## பிரிவுஉபசார விழா

இம்மாதம் 8-ந்திகதி செட்டிகுள விசாரணைப் பங்கைச்சேர்ந்த கட்டைஅடம்பன்கிராமத்தவர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர்க்குக் கவலைநிறைந்த ஓர்நாளாகும். கடந்தசூரான்டுகளாகத் தங்களைநேசித்து அரும்பணியாற்றிய கட்டளைக்குரவர் வண. ஏ. மூஜேசுவாமிகள் தம்சுவதேசம்செல்லவிருக்கின்றார்என்பதே அவர்களின்கவலைக்குக் காரணமாகும். ஆயினும், தாய்நாடுசெல்லும்குரவரைச் சந்தோஷமாக வழியனுப்புவான்வேண்டிஎல்லோரும் ஆலயமுன்றிலில் ஒன்றுகூடினார்கள்.

காலை 8மணியளவில் சுவாமியவர்கள் திவ்வியபூசை நிறைவேற்றியபின் மலர்மாலைசூட்டப்பெற்று ஆலயவாயிலிலிருந்து பாடசாலைமண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டார். மாணவர்கள் பிரிவுபசாரப்பாக்கள் படித்தார்கள். ஆசிரியை செல்வி செசிலியா சவிரி பிரிவுபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தார். ப. அன்னம்மாஎன்னும் 5-ம் வகுப்புமாணவி சுவாமியவர்களின் சேவைகளைப்பாராட்டி ஆங்கிலத்தில் பேச, வி. சுவாந்துஎன்னும் 4-ம்வகுப்புமாணவன் அதனைத் தமிழில் மொழிபெயர்த்துக்கூறியமை எல்லோரையும் பரவசப்படுத்தி விட்டது. பின்னர் தலைமைஆசிரியர் திரு. பே. இராயப்புஅவர்கள் பேசுகையில், "சுவாமியவர்களின் குழந்தைஉள்ளம், அவர் சிறுவர்களிடம்கொண்ட நேசம், அவரது தணியாதஆத்துமஈடேற்றவாஞ்சைஎன்பவற்றை எடுத்துக்காட்டி, தமது அயராமுயற்சியினால் அவர்செய்துள்ள பலசேவைகளிலும் மிகவும்அழகாகவும், உறுதியுள்ளதாகவும், தேவைக்கேற்றாற்போலும் செய்துதந்துள்ள சிற்றாலயவேலை, பாடசாலைவேலை ஆதியனவற்றை என்றும் மறக்கமுடியாது" எனக் கூறிநின்றார். சக்கிறிஸ்தாம் அலஸ்அவர்கள் பேசுகையில் அவரிடத்தில் இயற்கையாகவேயுள்ள சங்கிபாசஇலட்சணங்களைக் கண்ணுற்ற தமது கிராமமக்களில் இதுவரைமனந்திரும்பாத பாவிகள்பலருமே மனம் மாறிவிட்டார்களென்றும், இப்படியானஓர்பிதாவைத் தற்காலிகமாகப்பிரிவதுதானும் எல்லோருக்கும் பெரும் கட்டமெனவும் கூறினர்.

பிரியாவிடைநாயகர் மிக்ககவலையுடனும், கலங்கியகண்களுடனும் எழுந்து, தமதுபெற்றோரை, சகோதரரைத்தாம் பிரிந்து வந்திருந்தபோதிலும் நீங்கள் அனைவரும் எனதுதாயும், தந்தையும், சகோதரர்களுமெனத் தாம்கருதிச் சேவைசெய்யத் தேவன்சித்தம்கொண்டது தமக்கு மிகவும்சந்தோஷமெனக்கூறி, நன்மதிஉரைத்துத் தமக்குச் செய்தஉபசாரணைக்காக நன்றிதெரிவித்துத் திருக்கரஆசீர் ஈந்துநின்றார். ஈற்றில் சிற்றுண்டிஉபசாரணையுடனும், புகைப்படம்பிடிக்கும் நிகழ்ச்சியுடனும் விழாஇனிதே நிறைவேறியது.

— நிருபர்

---

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**தியானசாலைத் திறப்புவிழா :**

திரிகோணமலை மேற்றிராசன சரித்திரத்தில் பொன் அட்சரங்களால் பொறிக்கப்படவேண்டிய ஓர்சிறந்தசம்பவம். எமது மேற்றிராசனத்தில் இதுகாறும் இருந்துவந்த ஓர்பெருங்குறையை நிவிர்த்தியாக்க எம்பங்கைச்சேர்ந்ததும், இயற்கையே அமைதிகாட்டும் சூழ்நிலையில் அமைந்ததுமான வேப்படித்துறை என்னுமிடத்திலே, இம் மேற்றிராசன யேசுசபை மூப்புச்சுவாமியார் வண. ஜே. டபிள்யு. லாங்அவர்களின் அயராதசேவையானது 'மன்ரேசா'என்னும்நாமம்தாங்கிய தியான மாளிகையாக மாட்சியுடன் திகழ்கின்றது. இதனை விசுவாசிகள் பயன்படுத்தித் தங்கள்ஆன்மாக்களில் அமைதியை நிலைநாட்டும்படி செய்வதற்காக அன்று 5-3-59 வியாழக்கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் திருமலைஆயர் மகாவந். இக்னேஷியஸ் கிளென்னி எஸ். ஜே. ஆண்டவர்அவர்கள் வந்திறங்கினர். அவ்வேளை இப்பங்குக் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களும், யேசுசபை மூப்புச்சுவாமியவர்களும், 'மன்ரேசா' மாளிகையின் நிர்வாகஸ்தர் வண. ரி. செல்வராஜ் சுவாமியவர்களும் ஆண்டவர்அவர்களை வரவேற்று உபசரித்து அழைத்துச்சென்றனர். அவ்வமயம் பல்வேறுபங்குகளின் கட்டளைக்குரவர்களும், அர்ச் மிக்கேல் கல்லூரியைச்சேர்ந்த குருப்பிரசாதிகள், மாணவர்களும், அர்ச். சூசையப்பர் சபைச் சந்நியாசசகோதரர்கள், மாணவர்களும், கார்மேல் சபைக் கன்னியர்கள், மாணவிகளும், வ றி யோரின் கன்னியாஸ்திரிமார், பிரான்சிஸ்கன்சபைக் கன்னியர்கள், ஆசிரியர்கள், பிரமுகர்கள், கத்தோலிக்கருமாகப் பெருந்திரளானோர் சமுகமளித்தனர்.

அதன்மேல் ஆண்டவர் அவர்கள் திருச்சபைஒழுங்கின்படி தியானசாலை, படுக்கைஅறைகள், சாப்பாட்டறைமுதலாம் இடங்களை ஆசீர்வதித்தபின்னர் ஆங்கு அமைக்கப்பெற்றிருந்த சிற்றாலயத்தையும் ஆசீர்வதித்துத் "தெதேயும்" என்னும் தேவதோத்திரகீதம் பாடி வேண்டுதல்செய்தனர். அதன்மேல் அங்குகூடியிருந்தோர்க்குப் பல நன்மதிகளடங்கிய ஓர்பிரசங்கஞ்செய்தனர். ஒவ்வோர் கட்டளைக்குரவரும் தங்கள்விசுவாசிகளை இத்தியானசாலைக்குஅனுப்பி அவர்கள் தங்கள் ஞானகாரியங்களைச் சீர்ப்படுத்தச் செய்யவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டமை ஈண்டு குறிப்பிடற்குரியது.

பின்னர் சமுகமளித்திருந்தார் அனைவர்க்கும் சிற்றுண்டிகளும், குளிர்பானங்களும் வழங்கப்பட்டன. யாவரும் இன்னுரையாடி "மன்ரேசா" மாளிகையின் காட்சியைக்கண்டு களித்து மீண்டனர்.

**திருஇருதய பக்திச்சபை :**

எமதுபங்கிற்கு அவசியம்வேண்டியது திருஇருதய பக்திச்சபை. இதன் தேவையை நன்குணர்ந்த நமதுகட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகள் சென்ற 6-3-59 தலைவெள்ளித்தினத்தன்று 2-ம்பூசையின்பின் இச்சபையை ஸ்தாபகம்பண்ணிவைத்தார். அத்தருணம் 20அங்கத்தினர் சேர்க்கப்பெற்றுச் சபையினர்க்குரிய சின்னத்தைப் பயபக்தியுடன்பெற்றுத் தங்களை யேசுவின் திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுத்தனர். முடிவில் யாவரும்ஒன்றுகூடிக் குருமனைசென்று கட்டளைக்குரவர்அவர்களுடன் கலந்துரையாடி மீண்டனர்.

அன்றுபிற்பகல் திருச்சிலுவைப் பாதையின்பின் இச்சபைஅங்கத்தினர் தங்கள் கட்டளைக்குரவர் தலைமையில் கிளென்னி ஆண்கள்கழக மண்டபத்தில் ஒன்றுகூடிச் சம்பிரமமான தேனீர் விருந்தில் ஈடுபட்டனர். அதன்மேல் தங்கள்சபையின் முதலாவதுகூட்டத்தைக்கூடி அதன் வளர்ச்சிநோக்கிப் பின்வருமாறு உத்தியோகஸ்தர்களைத் தெரிவுசெய்தனர்.

தலைவர், திரு. ஜே. புவிராசசிங்கம். உபதலைவர், திரு. பிரான்சிஸ்யோசெவ். காரியதரிசி, திரு. ஜே. பி. மனுவல். உபகாரியதரிசி, தனாதிகாரி, பி. ஆர். யோசெவ். ஆலோசகர்கள், திரு. எஸ். ஈ. கல்லியா, திரு. வி. மார்க், திரு. ஈ. செபஸ்தியாம்பிள்ளை. முடிவில் திரு. எஸ். ஈ. கல்லியா, திரு. பி. ஆர். யோசெவ், திரு. ஜே. பி. மனுவல், திரு. ஜே. புவிராசசிங்கம்ஆதியோர் யேசுவின் திருஇருதயத்தின் மகிமைபற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். ஈற்றில் கட்டளைக்குரவர் இப்பங்கில் நெடுங்காலமாக இருந்துவந்த இக்குறை இன்றுநிவிர்த்தியாக்கப் பட்டமை குறித்தும், இச்சபையின் நோக்கம், அங்கத்தினரின் கடமைகள்பற்றியும் விரித்துவிளக்கித் தமதுபங்கில் யேசுவின் திருஇருதயநிழலில் ஒவ்வொரு குடும்பமும்சீவிக்கத் தருந்தஏற்பாடுகளைச் சபையினர் செய்துவாவேண்டுமெனக்கூறித் திருஇருதயநாதரின் கிருபாடிச் செபவேண்டுதல் செய்து ஆசீர்அளித்தனர். ஈற்றில்யாவரும் குரவர்அவர்களிடம் விடைபெற்று மீண்டனர்.

**வரப்பிரசாத நவநாள் :**

சிந்துதேச அப்போஸ்தலரான அர்ச். பிரான்சீஸ்சவேரியாரின் தவமுந அனுகூலந்தரும் நவநாளானது எமதுபங்கில் கடந்த 4-3-59 புதன்வாரம் சவேரியார் சேவாசங்கத்தினர் தலைமையில் தொடங்கியது. அன்று பூசையின்பின் நவநாள்ஆரம்பமாகித் தொடர்ந்துநடைபெற்றது. பக்திச்சபைகளைச் சேர்ந்தவர்களும், ஏனையவிசுவாசிகளும் இதில் கலந்து முடிவு தினமாகிய 12-3-59 வியாழனன்றுகாலை யாவரும்திருவிருந்தருந்தி நவநாளை முடிவுக்குக்கொண்டுவந்தனர்.

---

● முசோலினி அதிகாரத்தில் இருந்தபோது இத்தாலிக்கும், பரிசுத்தஸ்தானத்துக்குமிடையே கைச்சாத்தான லத்தரன்உடன்படிக்கையின் 30-ம்ஆண்டுநிறைவு சமீபத்தில்வந்தபோது முசோலினியின் பாரியாரான தொன்னாஇராக்கேல் பரிசுத்தபிதாவுக்குச் செய்துகொண்ட ஓர்வேண்டுகோளின்பேரிலே அவளுக்கும், அவள் குடும்பத்துக்கும் அவர் தமதுஆசீர்வாதம் அனுப்பிவைக்கலாயினர்.

● சோவியற்அரசின் முக்கியமான பிரச்சினைகளில்ஒன்று, அதன்தோழநாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் பரக்கஏற்பட்டிருப்பதேயாகும். இதற்கென அதுகையாடும் பரிகாரங்களில்ஒன்று, அந்நாடுகளிலே வேலையில்லாதுதிண்டாடும் வாலிபர்களைப் பிடித்துச் சைபீரியாவிலுள்ள சோவியற் "புதியநிலங்க"ளுக்கு அனுப்பிவைப்பதேயாகும்.

● லூர்துபதிக்காட்சிகளின் நூற்றுண்டுப்பூர்த்திவிழாக்கொண்டாட்டம் சென்றமாசிமாதம்18-ந்திகதி அப்பதியில்நடைபெற்றபோது 40,000யாத்திரிகர்களும், பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, அயர்லாந்து, ஆஸ்திரியா, ஐக்கியஅமெரிக்கதேசம் முதலாம்நாடுகளின் பிரதிநிதிகள்உட்படச் சுமார் 25மேற்றிராணிமாரும் சமுகமளித்திருந்தார்கள்.

● சேர்எட்மண்ட் ஹில்லறியுடன் இமயமலையைவெற்றிகொண்ட ஷெர்பா நோர்க்கே டென்ஸிங்எனும்பவருக்கு அருளப்பபாப்பரசர் சென்றவெள்ளிக்கிழமை பேட்டியருளினாரென வத்திக்கானிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. டென்ஸிங் என்பாருடன்பேட்டியின்போது இத்தாலிய அல்ப்ஸ்மலையேற்றநாரான ஆக்கிலே கம்பக்னேனியும் சமுகமாயிருந்தார்.



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

அடுத்துவரும் ஞாயிறுவாரம் பரிசுத்தவாரத்தின் முதல்நாள். அதுவே குருத்தோலை ஞாயிறு. மரங்களின் இலைகளும், கொப்புக்களும் மகிழ்ச்சிக்கும், வெற்றிக்குமுரிய சின்னங்களாம். பழைய கிரேக்கரிடமும், ரோமரிடமும் இந்த ஞாபகசின்னம் — வெற்றிச்சின்னம் வழக்கிலிருந்தது. பெயர் பெற்ற ஒலிம்பிக் விளையாட்டு வீரருக்கு ஒலிவம் இலைகளால் செய்யப்பட்ட முடி வெற்றிவிருதாக வழங்கப்பட்டது என்று சரித்திரம் கூறுகிறது. வேதசாட்சிகளைக்குறித்து அவர்கள் வேதசாட்சிப் பட்டமென்னும் இலைவிருதை — வெற்றிச்சின்னத்தைப் பெற்றவர்கள் என்று சொல்லப்படுகிறது.

யேசுக்கிறிஸ்துநாதரின் வெற்றித்தினத்தை — அவர் வெற்றிக்கோலத்துடன் ஜெருசலேம் பட்டணத்துக்கு எழுந்தருளிய நாளை வெளி அடையாளங்களாலே காட்டும் திருச்சடங்கே குருத்து ஞாயிறன்று நடைபெறுவது. சுவிசேஷம் கூறுவதாவது: யேசுநாதசுவாமியுடைய சீடர்கள் அவரை ஒரு அலங்கரித்த கழுதைமீதேற்றி ஜெருசலேம் நகரத்துக்குச் செல்லும் போது சனங்களும் தங்கள் ஆடைகளைத் தரையில் விரித்து, மரக்கிளைகளை முறித்துக் கைகளில் ஏந்திக்கொண்டு மகிழ்ச்சிப்பிரவாகத்தோடு "ஓசன்னா! தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருபவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்; உன்னத தேவனுக்கு ஓசன்னா!" என்று கோஷங்களை எழுப்பிக்கொண்டு அழைத்துச்சென்றனர். சிறுவர்களும் பெரியவர்களோடு சேர்ந்து கிறீஸ்துநாதரை வாழ்த்தினார்கள். பரிசேயரும், சதுசேயரும் இதைக்கண்டு மிகவும் பொறாமை கொண்டனர்.

இங்கிலாந்து, ஜேர்மனிபோன்ற தேசங்களிலே இத்தினத்தைப் "பூ ஞாயிறு" என அழைப்பர். அன்று குருத்தோலைகளுடனே பூக்களையும் சேர்த்துக் கட்டுவார்கள். ஒவ்வொருவருடைய கரங்களிலும் இதேமாதிரியான மலர் ஓலைகளே இருக்கும். இன்னும் குளிர்மிகுந்த தேசங்களிலே மரங்களின் கொப்புக்களே உபயோகமாயின. மத்தியகாலத்திலே ஐரோப்பாவிலே மேற்சொன்ன குருத்துஞாயிறு தினத்தை ஞாபகப்படுத்தும் முறையில் சிலைகள் அமைத்துக் காண்பிக்கப்பட்டதாம். யேசுநாதர் கழுதையில் போகும் மேரையாக ஒருசிலையை ஊர்வலமாகக் கொண்டுசெல்வார்களாம்.

ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள் பக்குவமாகப் பாதுகாக்கப்பட்டு, விபூதித்திருநாளில், சாம்பலாக்கப்பட்டுப் பூசப்படுகிறது. சிறுவர்களே! நீங்களும் குருத்தோலை ஞாயிறன்று பெறும் ஓலைகளைப் பரிசுத்த பண்டங்களாக நினைத்துப் பக்குவப்படுத்துங்கள். அவைகளை வீண் விளையாட்டுப் பொருள்களாகப் பாவிக்காது சுத்தமான வஸ்துக்களாகவே மதியுங்கள்.

அண்ணா

—*—

**வாழ்த்துக்கள்**

பரிசுத்தவாரம் குருத்துஞாயிறுடன் ஆரம்பமாகிறது. எமது இரட்சா பெருமானின் பாடுகளை மனதில் நினைந்துகொள்வோம்.

இவ்வாரத்தில் நடந்தேறும் திருச்சடங்குகளில் பக்தியுடன் பங்குபற்றுவோம்.

யேசுமரணித்து மூன்றும் நாள் உயிருடன் எழுந்தார். நாமும் ஞானமுறையில் அதிற் பங்கடைய வேண்டும்.

அனைவருக்கும் உத்தான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அண்ணா

## கதையின் பிற்பகுதி

(சென்ற 19-2-59-இல் வெளியான காவலனில் — புனிதவீரர் பக்கத்தில் கதைகட்டத் தெரியுமா? என்ற தலையங்கத்தின்கீழ் வந்த கதையின் பிற்பகுதி.)

### (1)

### செட்டியின் சமயோசிதபுத்தி

ஓர் ஊரிலே இருகள்வர்கள் வாழ்ந்துவந்தனர். இவர்கள் ஒருநாள் இரவு செட்டியொருவனுடைய வீட்டில் களவாடினர். பணப்பெட்டியொன்று கிடைத்தது. அதில் எவ்வளவுபணம் இருக்குமென எண்ணிப் பார்த்தனர். அதில் ஐம்பதினாயிரம் ரூபா இருந்தது. அப்பணத்தைவைத்திருந்தால் இனிமேல் ஒருகவலையுமின்றி வாழலாமென எண்ணி அவ்விருகள்வரும் பணம் முழுவதையும் தனித்து ஒருவன்மாத்திரமே எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டான்.

இதனால் அவ்விருவருக்குமிடையில் அவ்வறையிலேயே கைகலப்பு ஏற்பட்டுவிட்டது. இச்செய்கை நித்திரைசெய்கின்ற சிங்கத்தைத் தட்டி எழுப்புமாப்போல் இருந்தது. அதனால், நித்திரைகுளம்பிய செட்டியார் தான் இதுநாள்வரை கண்ணின் மணிகள்போல் பாதுகாத்துவந்த தனது பணத்திற்கு உலைவைக்கத் திருடர்கள் வந்திருப்பதைக் கண்டு அவர்களை விரட்டுவதற்காக அவர் அயல்வீட்டவர்களை உரத்தசத்தமாகக் கூப்பிட்டார். இதைக்கேட்ட திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர். எனவே, கள்வர்கள்கையில் சிக்கவேண்டியபணம் திரும்பவும் செட்டியார் கையில்கிடைத்தது. இருவர்சேர்ந்து களவாடிய பொருளை ஒருவன்தனித்து எடுக்கஎண்ணியதால் அவர்கள் கைக்கெட்டிய பணம் கடைசியில் இருவருக்குமில்லாமல் போய்விட்டது.

இ. எல். மத்தியாஸ்,
அர்ச். சவேரியார் கல்லூரி,
மன்னார்.

### (2)

### இன்னொரு விதம்

பணத்தைக் களவாடியபின் இருகள்வரும் தானே தனித்து அப்பணத்தைக் கைப்பற்ற எண்ணினர்.

பசிவந்தது. ஒருவன் மற்றவனைக் கடைக்கு அனுப்பி உணவுதேடிவரச் சொன்னான். சொல்லிவிட்டுக் கத்தியொன்றைத்தீட்டி மடியில்வைத்துக்கொண்டு மற்றவன் வரும்வரை காத்திருந்தான்.

கடைக்குச்சென்றகள்வன் வயிறார உண்டுவிட்டு மற்றவனுக்கென வாங்கியசாதத்தில் நஞ்சைக்கலந்து கொண்டுவந்தான். கடைக்குப் போனகள்வன் வீட்டில் நுழைந்ததும் மற்றவன் அவன்மேற்பாய்ந்து கத்தியாற் குத்திக் கொன்றுவிட்டான்.

பின்பசிமிகுதியால், கொண்டுவந்த சாதம்முழுவதையும் உண்டான். அவனும் இறந்தான்.

## தந்தையின் தாளிணை அஞ்சலிப்போம்

தந்தையைப் போலரு மன்பனுண்டோ? — அவன்
தாரணி கண்கண்ட தெய்வமன்றோ!
மைந்தர்கள் நாமவன் தாளிணையில் — தூய
மாமலர் தூவிப் பணிந்திடுவோம்.

அல்லும் பகலும் உழைத்தலுத்து — உயர்
ஆவியுடல் பொருள் அர்ப்பணிப்பான்
சொல்லருந் துன்பச் சுமை சுகிப்பான் — அவன்
சொர்ண மலர்ப்பதம் அஞ்சலிப்போம்.

மாசற்ற தந்தையின் சொல்லினைப்போல் — ஒரு
மந்திர மில்லையிப் பூவினிலே
தாசர்கள் நாமவன் ஆணையினைச் — சிரந்
தாங்கிப் பணிந்து புரிந்திடுவோம்.

ஊரும் உலகமும் மெச்சிடவே — நாங்கள்
உத்தம ராகி உயர்வடைந்தே
பேரும் புகழும் படைத்திடுவோம் — எமைப்
பெற்றவன் கண்டு மனங் களிப்பான்.

— 'சாந்தினி'

## இளவரசி இறேனியா

பல வருடங்களுக்குமுன் அமெரிக்கா தேசத்தில் பொலிமுஸ் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு மகளிருந்தாள், அவள்தான் இளவரசி இறேனியா ஒருநாள் இவளுடைய அறைக்குள் தகப்பனும், சொட்டர் என்னும் வைத்தியரும், பெரிய குருவாகிய தொட்டென்பறுவும் நின்றுகொண்டிருந்தனர்.

இளவரசி மெழுகினால் செய்யப்பட்ட பாவைபோல் இருந்தாள். அவள் கண்கள் ஒளிஇழந்து இருந்தன. அரசன் பொன்னாலும், வெள்ளியாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு பாவையைக்கொண்டுவந்தான். அவனுடைய பெரிய குரு (பூசாரி) அதைத் தங்கள் தேவதைக்குக் கொடுக்கும்படி கூறினான். ஆனால், வைத்தியன் அதை இளவரசியிடம் கொடுக்கும்படி கூறினான். அப்படியே அரசனும் பாவையை மகளிடம் கொடுத்தான். அதைக்கண்டதும், அவள் அலறிக்கொண்டு எழுந்து அப்பாவையைக் கிழித்தாள். உடனே அருகில் நின்றவர்கள் அதைப் பறித்துக்கொண்டனர். குருவுக்குக் கோபம் வந்துவிட்டது. "அரசே! நான் முன்னே தடுக்கவில்லையா?" என்றான்.

வைத்தியனும் அரசனைப்பார்த்து, "உமது மகளைக் குணமாக்க என்னால் முடியாது. அவளைப் பேய் பிடித்திருக்கிறது" என்றான். அதற்குப் பூசாரி மறுமொழியாக: "நீர் எமதுதெய்வத்தைச் சாந்திப்படுத்த வேண்டும். அந்தத் தெய்வத்துக்குக் கீழேதான் இவைகள் எல்லாம் இருக்கின்றன" என்று கூறினான்.

வைத்தியன் சொல்வான்: "அரசே! இவைகளால் உமக்கு ஒரு உதவியும் கிடையாது. ஆனால், நான் அறிந்த ஒரு மனிதன் இருக்கிறார். அவர் உமக்கு நிச்சயம் உதவிசெய்வார்."

அதைக்கேட்ட அரசன்: "நல்ல வைத்தியரே! அம்மனிதன் யார் என்பதைத் தயவுசெய்து எனக்குச் சொல்லும்". "கேளும் அரசே! அர்மேனிய தேசத்தில் பெரிய தீர்க்கதரிசி ஒருவர் இருக்கிறார். அவரிடம் போனால் குணமாக்குவார்" என்றார் வைத்தியர். இதைக் கேள்வியுற்றதும் பெரியகுரு கோபம்கொண்டு, "இப்படிப்பட்ட தப்பான கதைகளைக் கேட்கிறவர்களுக்கு நம்முடைய தெய்வம் நல்ல தண்டனை கொடுக்கும்" என்றார்.

வைத்தியன் பயமில்லாமல் இன்னும் தொடர்ந்து கூறுவான், "அரசே! அத்தீர்க்கதரிசியின் பெயர் பத்தலோமியோ. அவன் வணங்கும் கடவுளுக்குக் கிறீஸ்து என்று பெயர். கிறீஸ்துவின் வல்லமைகளிற் சில அவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன" என்றான். உடனே அரசன் தனதுசேவகரை அழைத்து அத்தீர்க்கதரிசியைக் கொண்டுவருமாறு கட்டளையிட்டான். இதை அறிந்த பெரியகுரு: "அரசே! உமக்குக் கெட்டகாலம் நெருங்கிவிட்டது. எமது தெய்வம் உம்மையும், உமது நாட்டையும், அரசாட்சியையும் பறிக்கப்போகிறது" என்றான். அரசன்: "எனக்குஒன்றும்வேண்டாம். நான் அவைகளிலும்பார்க்க எனது மகளை அதிகமாக நேசிக்கிறேன்" என்றான்

பத்தலோமியோ அரண்மனைக்கு வந்ததும், அரசனுடைய இருதயத்தில் நம்பிக்கைபிறந்தது. தனது மகளைக் குணமாக்கும்படி பத்தலோமியிடம் வேண்டினான். அதற்கு அவர்: "அரசே! என்னிடம் ஒன்றுமில்லை, கடவுளை வேண்டுகிறேன். அவர் சித்தம் நிறைவேறட்டும்" என்றார். உடனே அரசன் ஆனந்தம் கொண்டு கைகளைத் தட்டினான். சேவகர் ஒட்டகம் நிறைந்த பொன்னும், வெள்ளியும் கொண்டுவந்தார்கள். இவைகளை ஏற்றுக்கொண்டு தன் மகளைக் குணப்படுத்துமாறு அரசன் வேண்டினான். தீர்க்கதரிசி சிரித்துக்கொண்டு சொல்லுவார்.

"பொலிமூஸ் உம்முடைய திரவியம் ஒன்றும் எனக்கு வேண்டாம்."

இதைக்கேட்டதும் அரசன் அதிசயமடைந்தான். உடனே பெரிய குரு அரசனுடைய காதில் ஏதோ இரகசியம் ஓதினன். சட்டென்று அரசன் பத்தலோமியோ பக்கம் திரும்பினன்.

"என் குழந்தையை நீர் குணப்படுத்தாவிட்டால் உமது தலை வெட்டப்படும்" என்றான். "அதைப்பற்றிக் கவலையில்லை" என்ருர் அப்போஸ்தலர்.

அரசன் அவரை இளவரசியின் அறைக்குக் கூட்டிச்சென்ருர். அவள் அவரைக்கண்டதும் அலறிக்கொண்டு எழுந்து அவரை அப்பால்போகும்படி கத்தினள். ஆனல், பத்தலோமியோ "அசுத்த அரூபியே அப்பாலே போ. எங்கள் தேவனும், இரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்துவின் நாமத்தைக்கொண்டு நான் உனக்கு ஆணையிடுகிறேன். பிள்ளையைவிட்டுப் போ" என்ருர்.

பிள்ளை நுரைக்கத்தொடங்கினள். எல்லாரும் பயமடைந்தனர். திரைச்சீலை தானகத் தள்ளப்பட்டது. பிள்ளை அலறிக்கொண்டு கட்டிலின்மேல் விழுந்தாள். கண்கள் மூடியபடி இருந்தன.

பெரியகுரு அவரைப் பார்த்து: "நீ பிள்ளையைக் கொன்றுவிட்டாய்" என்ருர். ஆனல், வைத்தியர் கைநாடியைப் பிடித்துப்பார்த்துவிட்டு, "பத்தலோமியோ பேயைத் துரத்திவிட்டார். பிள்ளை தூங்குகிருள்" என்ருர்.

இறேனியா கண்களைத் திறந்தாள். பக்கத்தில் நின்ற தகப்பனைப் பார்த்தாள். "அப்பா! எத்தனையோ கிழமைகளாக நான் உங்களைக் காணவில்லையே. எங்கு சென்றிருந்தீர்கள்" என்று வினவினள்.

"பேய் அகன்றுவிட்டது" என்ருர் அப்போஸ்தலர். அரசன் அவர் கால்களை முத்தமிட்டு: "உண்மையாகவே உம்மிடம் தேவனுடைய வல்லமை இருக்கிறது" என்ருன். அவர் அரசனைத் தூக்கிநிறுத்தி, "நானல்ல; இரட்சகரே உமது மகளைக் குணமாக்கியவர். அவர்தான் பிதாவாகிய சர்வேசுரனுடைய குமாரனும், எங்கள் இரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்துநாதர்" "அப்படியானல் அவரைப்பற்றி எனக்குச் சொல்லும், அவருடைய வழியை எனக்குக் காட்டும்" என்ருர் அரசன்.

அரண்மனையில் வேதம்போதித்து எல்லாரையும் மனந்திருப்பினர் அப்போஸ்தலர்.

பொலிமூஸ் தனது முடியையும், திரவியங்களையும் ஒருபக்கத்தில் வைத்துவிட்டு, அவற்றைத்துறந்து கிறீஸ்துநாதரைப் பின்பற்றி அமெரிக்காவின் முதல் மேற்றிராணியாரானுர்.

## நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்ரேறியாவாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினல் ஏற்படும்ரோகங்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே
எமது சேவையின் இலட்சியம்.




## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்த கூட்டம் வழமைப்பிரகாரம் நடப்பதுபோல் இம்மாதக் கடைசிச்சனிக்கிழமையில் நடைபெருது. அடுத்துவரும் சித்திரை மாதம் 4-ந்திகதி சனிவாரம் பி. ப. 4-30 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்ருலயத்தில் நடைபெறும். அப்பொழுது நாலுசகோதர சகோதரிகள் தங்கள் வார்த்தைப்பாட்டைச் செய்வார்கள். அன்று ஆடம்பரமான கூட்டமாயிருப்பதால் எல்லோரும் தத்தம்சபை அங்கிகளைக் கொண்டுவரும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். பகுதிமுதலாளிமார்சங்கம் பி.ப. 3-30மணிக்கு நடைபெறும். ஆகவே, பகுதிமுதலாளிமார் தயவுசெய்து நேரத்தோடுவரவும்.

A. S. FRANCIS OF MARY,
தலைவர்.

## முதல்வருட மரண ஞாபகம்

சுவாம்பிள்ளை இன்னசித்தம்பி
அவர்கள்
பரமபதமடைந்த முதல்வருட
நிறைவுதினம் 20—3—59.

அடுத்துவரும் சனிவாரம் 21-3-59 காலை7மணிக்கு, சேமக்காலையிலுள்ள இன்னசித்தம்பி ஞாபகசிற்ருலயத்தில் அவரது ஆத்துமசாந்திக்காக ஓர் துக்கப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்று அவரது குடும்பத்தினருடன் தாங்களும்ஒன்றித்து அவரது ஆத்தும இளைப்பாற்றிக்காகத் தேவனிடம் மன்ருடிக்கொள்வீராக.

இன்னசித்தம்பி வளவு,
சில்லாலை, பண்டத்தரிப்பு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1566

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

கரையூர் தற்காலம்
1. கொழும்பு ஜி. கே. ஆபிரகாமும்,
2. பெண் மெற்றில்டாவும்
—வழக்காளிகள்.
எதிராக
1. கரையூர் செபஸ்தி யோசேப்பும்,
2. பெண் சேடம்மாவும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1566-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1959-ம் ஆண்டு சித்திரைமாதம் 21-ந் திகதி (21-4-59) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்ற பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,838-34-டம், இன்னும் அதற்கு 30-3-57 தொடக்கம், 25-7-57 வரையும் 100-க்குப் 12% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுப்பிக்கும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 291 ரூபா 50சதமும். இதில் செலவுவகையில் ரூபா 150கொடுபட்டது. ரூபா 3,000 கோட்டில் கட்டப்பட்டது. இன்னும் ரூபா 319 சதம் 06 தவருகக் கட்டப்பட்டன.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர்இறை, "தேவரீர் குளத்து வளவு" டாட. நில. இலா. 3 குளி 14-டம், வீடும், மற்றும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—பிரான்சிஸ்பிள்ளை சீமான்பிள்ளையினதும், பெண் ஞானம்மாவினதும் ஆதனம். வடக்கு—ஜே. சி. ஜெயராஜசிங்கத்தினதும், பெண்ணினதும் ஆதனம். மேற்கு—இராத்தின சிங்கத்திற்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—ஆஸ்பத்திரி கல்லேசரிறேட். இதிலுடங்கலும், இதைச் சேர்ந்தவைகளும்.

தா. செல்லையா,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 9-3-59.

### நேர்த்தியின் பூர்த்தி

நான் நினைத்தகாரியம் அனுகூலமானதால் நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

மிஸிஸ் ஏ. பி. தம்பையா.

## ஞானஒடுக்கம்

கருக்குப்பனை, அர்ச். வனவாச அந்தோனியார் தேவாலயத்தில் சென்றவாரம் (8-3-59 தொடக்கம், 15-3-59முடிய) ஓர் ஞானஒடுக்கம் வண. சுற். என். குருஸ் சுவாமியவர்களால் பக்தியருட்சியுடன் நடந்தேறியது. குரவரவர்களின் அமிர்தபோதகம் கடினபாவிகளின் மனங்களையும் மாற்றியமைத்ததோடு தேவநேசம், பிறர்சிநேகம் என்பவற்றில் எல்லோரையும் திளைக்கவும் செய்தவிட்டது. இத்துடன் அடுத்தஆண்டில் இருவாரங்களுக்கு மகாஞானஒடுக்கம்ஒன்று செய்யவும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

ஜே. சி. குருஸ்

> **விளம்பரம்**
>
> யாழ்ப்பாணம், 1-ம்குறுக்குத் தெருவில் 37-ம் இலக்கத்தில் இருக்கும் பல்வைத்தியசாலை திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில்மட்டும் திறந்திருக்கும்.
>
> ஜே. இணுக்கும்புரு.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சங். அல்போன்சா கன்னியாஸ்திரியிடம் யான் இரந்துகேட்ட கருமங்கள் யாவும் அனுகூலமாயின. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். அவவின்புகழ் எங்கும், என்றும் நிலவுவதாக.

ஓர்பக்தன்.

* * *

### நன்றியறிந்த தோத்திரம்

இரந்து மன்ருடுபவர்கட்கு மனமுவந்து ஈயும்அன்பான எங்கள் அருமைத்தாயிடம் அடியேன் இரந்தவிண்ணப்பம் கிடைக்கப்பெற்றேன். அதற்கு நன்றி. என்றும் எங்கள் சகாயமரியன்னையின்நாமம் வாழ்த்தப்படக் கடவதாக.

சதாசகாயநாயகியின் பக்தன்.

* * *

### நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார், அர்ச். ஆரோக்கியநாதர் இவர்களிடம் நான் இரந்துகொண்டதன்பேரல், எனக்குண்டாயிருந்த குடல்கோளாறும், நெஞ்சுவருத்தமும் படிப்படியாகக் குணமடைந்துவருகிறது. இன்னும் பூரணசுகத்தை அருளும்படி அவர்களை மன்ருடுகிறேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்
புங்குடுதீவு

## பரீட்சார்த்த நிலக்கடலைச்செய்கை

அச்சுவேலியிலே திரு. ஐ. என். யோசேப் அவர்கள் ஒருபரப்புத் தோட்டநிலத்திலே இருநூறுநிலக்கடலைக் கன்றுகள் செய்கைபண்ணினர். பரீட்சார்த்தமாக ஆறுறுத்தல் நிலக்கடலை விதைக்கப்பட்டு, 86றுத்தல்நிலக்கடலை சமீபத்திலே அறுவடைசெய்யப்பட்டதெனத் தெரியவருகிறது. மூன்றுமாதகாலப் பயிராகிய இதனை ஓர்மாற்றுப்பயிராகச் செய்கைபண்ணலாம்.

---

● சமீபகிழக்குநாடுகளிலுள்ள பலஸ்தீன் அகதிகளுக்கு உதவியளித்துவருவன ஐக்கியநாடுகளின் கஷ்டநிவாரணவேலைகளின் ஸ்தாபனமேயாகும். உணவுக்கும், உறைவிடத்துக்குமாக மிகப்பெரும்பாலான அராபிய அகதிகள் முற்றிலும்இக்தஸ்தாபனத்திலேயே தங்கியிருக்கின்ருர்கள். ஆனல், இக்தஸ்தாபனத்துக்கு உதவியாய் இதுவரைசோவியற்அரசு உள்ளபடியே ஒன்றுமேகொடுக்கவில்லை.

● ஜப்பானின் ஏற்றுமதிவியாபாரத்தைப் பாதிக்கும்வகையிலே தென்கிழக்கு ஆசியநாடுகளில் மிகவும்மலிவானவிலைக்குத் தனதுசாமான்களைக் கொண்டுபோய்க்குவித்து, ஜப்பானுக்கு எதிராகச் செஞ்சீன ஓர்பொருளாதாரயுத்தம் தொடக்கியிருக்கிறது. இதனை முறியடிக்க அமெரிக்க அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துவருகின்றது.

● பேர்லின்பிரச்சினை சம்பந்தமாய் ஓர்யுத்தம்உண்டாக மாட்டாதென்று ஐக்கியநாடுகளின் பிரதமகாரியதரிசியான திரு. டாய்க் ஹம்மார்ஸ்ஜோல்ட் அன்றுசனிக்கிழமை றங்கூன் நகரிலே அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர்.

பிரித்தானியபிரதமர் ஹரோல்ட்மைக்மிலன் கூறியதைத் திரும்பக்கூறுகிறேன்; கலக்கமும், குழப்பமும், தப்பெண்ணமும் காரணமாகவே யுத்தம்மூழுகின்றது; இரண்டுபக்கமுமே யுத்தத்தை விரும்பவில்லையென்று மேலும் அவர் கூறலாயினர்.

## யூதர்களும் இரும்புத்திரைநாடுகளும்

பிறநாடுகளிலிருந்து—பிரதானமாய் இரும்புத்திரைக்குப் பின்னுள்ள நாடுகளிலிருந்து யூதர்களின் இஸ்ரேயல்நாட்டில்போய்ப் பெருந்தொகையான யூதர்கள் குடியேறிக்கொண்டிருக்கிருர்களென வெளிவந்துள்ள அறிக்கைகளாலே அராபியஉலக முழுவதும் பெருந்திகில் உண்டாயிருக்கிறது. இரும்புத்திரைக்குப் பின்னுள்ள ரூமேனியநாட்டிலிருந்துதான் அதிகமானயூதர்கள்போய் அங்கு குடியேறிக்கொண்டிருக்கிருர்கள். கடந்தபத்துவாரங்களிலும் இஸ்ரேயல்நாட்டின் ஹாய்வாதுறைமுகம்போய்ச் சேர்ந்த 20,000யூதர்களில் அதிகமானேர் ரூமேனியாவிலிருந்தே அங்குபோனர்கள், எஞ்சியவர்கள்ஏனையகம்யூனிஸ்தநாடுகளிலிருந்து போனவர்கள். சோவியற்ருஷியாவில் தற்போது சுமார்20லட்சம் யூதர்களும், ஹங்கேரியில் 3லட்சத்து30 ஆயிரம்யூதர்களும், ரூமேனியாவில் 3லட்சம்யூதர்களும், போலாந்தில் 30 ஆயிரம்யூதர்களும், செக்கோசிலவக்கியாவில் 50ஆயிரம்யூதர்களும் இருந்துவருகிருர்கள். இவர்களெல்லாம் இஸ்ரேயலில்போய்க் குடியேறுவார்களானல் அங்கேசூழவுள்ள தங்கள்பாடு மிகமோசமாயிருக்குமென்று அராபியநாடுகள்சிந்தித்துக் கலக்கமடைகின்றன. ருஷியாவும், இஸ்ரேயலும் சேர்ந்து அராபியநாடுகளுக்கு எதிராகச்செய்யும் சூழ்ச்சிஎன்றும் இது கருதப்படுகிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 19-1959.